# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 48

**சா.சி. சிவசங்கர்**

போக்குவரத்துத் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2022

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் | 14 |
| 3. | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | 20 |
| 4. | தமிழ்நாடு மேட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 96 |
| 5. | சாலை போக்குவரத்து நிறுவனம் | 102 |
| 6. | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் | 110 |
| 7. | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு | 119 |
| 8. | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 120 |
| 9. | சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் | 130 |
| 10. | எதிர்கால கொள்கைகள் மற்றும் திட்டங்கள் (Future Policies and Road Map) | 136 |
| 11. | முடிவுரை | 162 |

# போக்குவரத்துத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2022-2023

## 1. முன்னுரை

போக்குவரத்துத் துறையின் 2022-2023-ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழகத்தில் பொதுப் போக்குவரத்துக்கான பேருந்து சேவைகள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளைப் பற்றிய ஒரு கண்ணோட்டமாகும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளூர், நகரப் பகுதி, கிராமப் பகுதி, நகரங்களுக்கு இடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கு பல்வேறு வகையான பேருந்து சேவைகளை குறைந்த கட்டணத்தில் வழங்குவதால், நாளொன்றுக்கு சுமார் 1.55 கோடி மக்கள் பயணம் செய்ய முடிகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் கொரோனா பெருந்தொற்று காலத்தில் மிகவும் கடினமான கட்டத்தை சரியான நேரத்தில் அரசின் நிதியுதவி மற்றும் ஆதரவால் கடந்து வந்திருக்கின்றன. மேலும், குறிப்பிட்ட பிரிவினருக்கு குறைந்த கட்டணத்தில் அல்லது கட்டணம் இல்லாமல் பேருந்துகளில் பயணம் செய்ய பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படுகின்றன. பெண்கள் கல்வியில் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பில் அதிகாரம் அடையும் நோக்கத்துடன், பொது போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் தேர்தல் வாக்குறுதியான, **"மாநிலம் முழுவதும் உள்ள நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பேருந்து சேவை வழங்குவோம்"** என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த இலவச பயண வசதி திருநங்கைகளுக்கும், 40 சதவீத மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத்திறனாளிகளின் உதவியாளருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த BS–VI இணக்கமான டீசல் பேருந்துகள், மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்வதுடன், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் நுண்ணறிவு பேருந்து சேவைகள் மூலம் பேருந்தின் வருகையினை அறிந்து கொள்ளுதல், பயணிகள் தகவல் அமைப்பு, பயணச்சீட்டு செலுத்தும் முறை மற்றும் பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் முயற்சிகள் மேற்காணும் நடவடிக்கைகளின் மூலம் தொடங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துத் துறையின் எதிர்கால கொள்கைகள் மற்றும் திட்டங்கள் (Road Map) போன்றவை அரசு போக்குவரத்துக் கழகங்களை அனைத்து அம்சங்களிலும் நாட்டின் சிறந்த நிலைக்கு மாற்றவும் மற்றும் 2030–ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சி இலக்கினை அடைவதற்கும் உதவுகிறது.

மாநிலத்திலுள்ள இரயில் பாதைகளை வலுப்படுத்தவும், புதிய இரயில் பாதைகள், இரட்டை இரயில் பாதைகள் மற்றும் அகல இரயில் பாதைகள் அமைப்பதற்குத் தேவையான நிலத் தேவையை பூர்த்தி செய்ய இரயில்வே துறையுடன் போக்குவரத்துத் துறை ஒருங்கிணைந்து செயலாற்றுகிறது.

மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை, பேருந்து இயக்க தூரம், பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை, பயணிகளின் அடர்வு விகிதம் மற்றும் விபத்துகளை குறைத்தல் போன்ற அம்சங்களின் அடிப்படையில் பொதுப் போக்குவரத்தினை நாட்டின் முதலாவது இடத்திற்கு கொண்டு வருவதற்கு போக்குவரத்துத் துறை முயற்சி செய்கிறது.

## 1.1 கண்ணோட்டம்

இந்தியாவிலேயே மிகவும் நகரமயமாக்கப்பட்ட மற்றும் வளர்ந்த மாநிலங்களுள் ஒன்றாக விளங்கும் தமிழ்நாடு, பொருளாதாரம், கல்வி போன்றவைகளை நன்கு மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள் மற்றும் பொது போக்குவரத்து அமைப்பின் மூலம் அடைந்துள்ளது. பொது போக்குவரத்து அமைப்பு என்பது பொது மக்களின் குழு பயணத்தை செயல்படுத்தும் போக்குவரத்து அமைப்பாகும். இது அரசு அல்லது தனியாருக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அதிக மக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும், சொந்த வாகனத்தை

பயன்படுத்துவதினால் ஏற்படும் வாகன நெரிசலை குறைப்பதற்கும், வாகனங்களால் ஏற்படும் காற்று மாசினை குறைக்கவும் உதவுகிறது. மேலும், தினமும் நெரிசலான பகுதிகளில் பயணம் செய்பவர்களை மன அழுத்தத்திலிருந்து விடுவித்து, பணத்தை சேமிக்க உதவுகிறது.

பொது போக்குவரத்து அமைப்பு என்பது உள்ளூர், நகரப் பகுதி, கிராமப் பகுதி, நகரங்களுக்கு இடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு மக்கள் எளிதில் குறைந்த கட்டணத்தில் பயணிப்பதை இலக்காகக் கொண்டு செயல்படுவதுடன், கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். பேருந்து போக்குவரத்து என்பது மக்களின் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் சார்ந்த பயணம், பராமரிப்பு, சந்தைகள், சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நகரம் மற்றும் பெரு நகரங்களுக்கு விவசாயப் பொருட்களை விற்பனைக்காக கொண்டு செல்வதற்கும் பயன்படுகிறது.

சிறந்த போக்குவரத்தானது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கிய ஊக்கமாகவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் காரணமாக அமைகிறது. பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொலைநோக்கு பார்வை பின்வருமாறு:–

I. பேருந்து போக்குவரத்தானது பயனாளர்களுக்கு ஏதுவாகவும், நட்பாகவும், திறமையானதாகவும்,

குறைந்த கட்டணத்தில் கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்;

II. மின்சாரப் பேருந்துகள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), திரவ நிலை எரிவாயு (LNG) முதலிய மாற்று எரிபொருளுடன் இயக்கக்கூடிய பேருந்துகளை பொது மக்கள் பயணிக்கும் வகையில் வழங்குதல்;

III. மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய பேருந்துகளை அறிமுகம் செய்தல்;

IV. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இணைக்கப்பட்ட சேவைகள், நுண்ணறிவு போக்குவரத்து முறைகள் ஆகியவற்றை பயன்படுத்தி இணையத்தின் வழியாக பேருந்துகளை கண்காணித்தல் மற்றும் பயணிகளுக்கான தகவல்களை நிகழ்நேர அடிப்படையில் வழங்குதல்;

V. புதுமையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலம் தனியார் வாகனப் பயன்பாட்டினை குறைத்து எளிதான மற்றும் பாதுகாப்பான பயணங்களை வழங்குதல்;

VI. சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் எளிதாக செலுத்தக்கூடிய முறையில் பயணச்சீட்டுக்களை பெறுவது;

VII. 2030–ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது.

## 1.2 தமிழ்நாட்டில் பேருந்து அடிப்படையிலான பொது போக்குவரத்து

அரசு பேருந்து போக்குவரத்தானது தமிழ்நாட்டில், அதிகமாக பயன்படுத்தப்படும் பெருந்திரள் போக்குவரத்தாகும். திட்டமிட்ட நேரத்தில், திட்டமிட்ட வழித்தடங்களில் குறைந்த கட்டணத்தில் பேருந்து போக்குவரத்து இயக்கப்படும். அதே நேரத்தில், இலகுரக வாகனப் பயன்பாடு, போக்குவரத்து நெரிசல் மற்றும் காற்று மாசு குறைவதற்கு பேருந்து போக்குவரத்து பயன்படுகிறது.

வேகமாக அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கேற்ப வேலைவாய்ப்பு, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் பிற தேவைகளுக்கு நகரத்திற்குள்ளும், ஊரகப் பகுதியில் உள்ளோர் நகர மற்றும் மாநிலத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் செல்ல திறமையான, பாதுகாப்பான, வசதியான, நம்பகமான, நிலையான மற்றும் குறைந்த கட்டணத்தில் போக்குவரத்து சேவை வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. நம்பகமான சாலை

போக்குவரத்து மூலம் மாநிலத்தின் அனைத்து பகுதிகளும் நன்கு இணைக்கப்பட்டுள்ளன.

2020–2021–ஆம் ஆண்டில், கொரோனா பெருந்தொற்று காரணமாக அரசு பேருந்துகளில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 0.7 கோடியாகக் குறைந்து, மீண்டும் 2021–2022–ஆம் ஆண்டில், நாளொன்றுக்கு 1.21 கோடியாக அதிகரித்தது, பின்னர், அனைத்து கொரோனா பெருந்தொற்று கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்ட பிறகு மார்ச் 2022–இல், பயணிகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 1.55 கோடியாக அதிகரித்துள்ளது.

தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் நோக்கத்துடன், புதிய தொழில்நுட்ப பேருந்துகள் (அதாவது, சுற்றுச்சூழலுக்கு உகந்த BS–VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள்) அத்துடன் உயர்ந்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகளை KfW வங்கி (ஜெர்மனி வளர்ச்சி வங்கி) நிதியுதவியுடன் எதிர்காலத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்துகளை அறிமுகம் செய்ய மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

பெண்கள் சமூகத்தோடு ஒன்றிணைவதை எளிதாக்கும் நோக்கத்துடனும், பொருளாதாரச் சமநிலையை அடையும் நோக்கத்துடனும், அனைத்து

பெண் பயணிகளுக்கும் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (வெள்ளைப் பலகை) மட்டும் கட்டணமில்லாமல் பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்திற்காக, தமிழகம் முழுவதும் 7,321 சாதாரண நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் தினசரி 36 இலட்சம் பெண் பயணிகள் பயணம் செய்கின்றனர். மேலும், இதன் மூலம் பெண்கள் தங்களின் பணியிடத்தை சுலபமாக அடைவதற்கும், கல்வி, சுகாதரம் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றையும் எளிதில் பெற முடிகிறது. 30.04.2022 வரை 106.34 கோடி பெண் பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மொத்த பயணிகளில் 61.78 சதவீதமாகும். இந்த இலவச பயண வசதி திருநங்கைகளுக்கும், 40 சதவீத மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத்திறனாளியின் உதவியாளருடன் பயணிப்பதற்கும் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. திருக்குறளின் நெறிகளை பரப்புவதற்காக தமிழ் புலவர் திருவள்ளுவரின் திருவுருவம், திருக்குறள் மற்றும் திருக்குறளின் விளக்கங்களுடன் கூடிய பலகைகள் 20,304 அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பொருத்தப்பட்டு உள்ளன. கப்பலோட்டிய தமிழன்


வ.உ.சிதம்பரனார் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் நடமாடும் புகைப்படக் கண்காட்சி பேருந்து, பள்ளி மாணவர்கள் கண்டுகளிப்பதற்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பயணம் செய்தது.

ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்து இயக்குபவர்களுக்கு கட்டண நிலை பேருந்து (Stage Carriage) இயக்க அனுமதி வழங்கப்படுகிறது. இந்த வழித்தடமானது, பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லும் கட்டண நிலைகளைக் கொண்டுள்ளது. தமிழகத்தில், அரசுக்குச் சொந்தமான அரசு போக்குவரத்து கழகங்கள் மற்றும் தனியார் பேருந்து நிறுவனங்கள் கட்டண நிலை பேருந்துகளை இயக்க அனுமதிக்கப்பட்டு உள்ளனர். 01.01.2022 அன்றுள்ளவாறு, தமிழகத்தில் இயக்கப்படும் 32,876 கட்டண நிலை பேருந்துகளில், அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 20,926 பேருந்துகளும், தனியார் பேருந்து நிறுவனங்களின் மூலம் 7,858 பேருந்துகளும் மற்றும் 4,092 சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றது.

## 1.3 போக்குவரத்து துறையின் நிருவாக அமைப்பு

மாநிலத்தின் பொதுப் போக்குவரத்திற்கான பேருந்து சேவைகளை நிர்வகிக்கும் பொறுப்பு போக்குவரத்துத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

இத்துறையின்கீழ் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் போக்குவரத்துத் துறை இயங்கி வருகிறது. போக்குவரத்துத் துறையின் நிருவாக தலைவராக அரசின் முதன்மைச் செயலாளர் செயல்படுகிறார். அவருக்கு போக்குவரத்து துறை சார்ந்த பணிகளில் உதவியாக கூடுதல் செயலாளர், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் செயல்படுகிறார்கள்.


மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
முதன்மைச் செயலாளர் போக்குவரத்துத் துறை
தலைமைச் செயலகம் போக்குவரத்துத் துறை
தலைவர் அலுவலகம்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்
தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்
சாலைப் போக்குவரத்து நிறுவனம்
பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு
தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை
மா.போ. கழகம்
அ.வி.போ. கழகம்
அ.போ.கழகம் விழுப்புரம்
அ.போ.கழகம் சேலம்
அ.போ.கழகம் கோவை
அ.போ.கழகம் கும்பகோணம்
அ.போ.கழகம் மதுரை
அ.போ.கழகம் திருநெல்வேலி

போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன:–

1. அரசு போக்குவரத்துக் கழகங்கள்

   i. மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

   ii. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை

   iii. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

   iv. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

   v. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

   vi. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

   vii. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை

   viii. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

2. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை
3. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்
4. சாலைப் போக்குவரத்து நிறுவனம்
5. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

போக்குவரத்துத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு, சாலை போக்குவரத்து நிறுவனத்தின் அலுவல்வழி தலைவராகவும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள தலைவருக்கு, தலைவர் அலுவலகம் உதவி புரிகிறது. அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் செயல்படுகிறார். மேலும், இத்துறை தென்னக இரயில்வே விரிவாக்க திட்டங்களை தமிழகத்திற்குள் செயல்படுத்துவதற்கு முகமை துறையாக செயல்படுகிறது.

## 2. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

உலகளாவிய இலக்குகள் (17 இலக்குகள்) என்றழைக்கப்படும் நிலையான மேம்பாட்டு இலக்குகள் (SDGs), வறுமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், பூமியை (கோள்) பாதுகாப்பதற்கும், 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து மக்களிடம் அமைதியும் வளமையும் சென்றடைந்துள்ளதை உறுதி செய்வதற்குமான ஒரு உலகளாவிய அழைப்பாக 2015–ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 17 நிலையான மேம்பாட்டு இலக்குகளும் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவையாகும். ஒரு பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை, மற்ற பகுதிகளின் விளைவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் அத்தகைய வளர்ச்சியானது சமூக, பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை சமன் செய்ய வேண்டும்.

பொதுப் போக்குவரத்தின் பயன்கள் மூன்று முக்கிய இலக்குகளை மையமாகக் கொண்டுள்ளதை ஒரு நிலையான இயக்க ஏற்பாட்டு முறையை உறுதி செய்கிறது – இலக்கு 3: ஆரோக்கியமான உடல்நலம் மற்றும் நல்வாழ்வு (சாலை பாதுகாப்பு); இலக்கு 11: நிலையான மாநகரங்கள் மற்றும் சமூகங்கள்; மற்றும் இலக்கு 13: காலநிலை செயல்பாடு

(காலநிலை மாற்றத்திற்கேற்ப மாசினை குறைத்தல்). மேலும், முனைப்பான பொதுப் போக்குவரத்து முறை, நாடுகள் பின்வரும் இலக்குகளை அடைய உதவுகிறது. அவையாவன: இலக்கு 8: ஒழுக்கமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி; இலக்கு 9: தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு; இலக்கு 10: குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்; மற்றும் இலக்கு 12: பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி. இந்த இலக்குகளை நிலையான முறையில் அடைய அரசு போக்குவரத்துக் கழகங்கள் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

அடிப்படை நகர்புறத் தேவை என்பது போதிய, நம்பகமான மற்றும் பாதுகாப்பான பொதுப் போக்குவரத்திற்கான அணுகுமுறை என்பதை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அங்கீகரிக்கின்றன. பொது போக்குவரத்தை விரிவுபடுத்துவதன் வாயிலாக 2030 ஆம் ஆண்டிற்குள்: அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான, போதுமான, அணுகக்கூடிய மற்றும் நிலையான போக்குவரத்து முறைகள் கிடைக்கச் செய்வதை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 11.2 நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வாறு செய்யும்போது, பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களின் தேவைகளுக்கு சிறப்பு கவனம்

செலுத்தப்பட வேண்டும். நகர்புறப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் என்ற முன்னோடி திட்டம் மற்றும் அரசால் வழங்கப்பட்ட பல இதர திட்டங்கள் அல்லது சலுகை அடிப்படையில் பெரும்பாலான மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் இந்த இலக்கினை அடைய அரசு உதவி செய்கிறது.

பசுமையை மீட்பதற்கு இன்றியமையாத பகுதியாக பொது போக்குவரத்து மாற வேண்டும். பொதுப் போக்குவரத்தின் மீதான நம்பிக்கையை மீண்டும் உருவாக்கி கொள்கை மற்றும் முதலீடு குறித்து மேற்கொள்ளப்படும் முடிவுகளில் உரிய கவனம் செலுத்த வேண்டிய நேரமிது.

பொதுப் போக்குவரத்தை நாம் தொடர்ந்து ஆதரித்து வந்தால், அது மக்களை மாநகரங்களுக்கு அழைத்துச் சென்று, சிறந்த, நிலையான சுற்றுச்சூழலையும் பொருளாதாரத்தையும் உருவாக்கும்.

நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் என்ற நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 11 மற்றும் 2030–ஆம் ஆண்டிற்கான இலக்கின் கீழ் பொதுப் போக்குவரத்து வருகிறது: 2019–20–ஆம் ஆண்டில் இலக்கு 11 இல் தமிழ்நாட்டின் கூட்டு மதிப்பெண் 79 மற்றும் மாநில தரவரிசை 10 ஆகும்.

இலக்கு 11.2.1a, 11.2.1b மற்றும் 11.2.1C ஆகியவை அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பொருந்தும்.

2015–16 முதல் 2019–20 வரையிலான தமிழ்நாட்டின் மதிப்பெண் விவரம் வருமாறு:–

| குறியீடு | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 | 2019–20 |
|---|---|---|---|---|---|
| 11.2.1a மொத்த பேருந்து எண்ணிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்காக இயக்கப்பட்ட பேருந்து சதவிகிதம் (%) | 11 | 11 | 11 | 12 | 13 |
| 11.2.1b வயது முதிர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டணமில்லா பேருந்து பயணச்சீட்டுகளின் எண்ணிக்கை | 213021 | 283575 | 306941 | 329554 | 351617 |
| 11.2.1c , மகளிருக்கான சிறப்புப் பேருந்து எண்ணிக்கையின் விகிதம் | 200 | 250 | 250 | 250 | 210 |

இந்த இலக்குகளை எய்துவதற்கு, தமிழ்நாட்டில், அரசு போக்குவரத்து கழகங்களால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:–

செயல்பாடு–1: தமிழ்நாடு முழுவதும் சாதாரண நகர பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்வதற்கு நகர பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதன் மூலம்

நாளொன்றுக்கு சுமார் 36 இலட்சம் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்கின்றனர்.

செயல்பாடு 2: அரசு விரைவு போக்குவரத்து கழகப் பேருந்துகளில் மகளிருக்கென குறிப்பிட்ட இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

செயல்பாடு–3 : பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாநகர போக்குவரத்து கழகத்தின் 2500 பேருந்துகளிலும், 66 பேருந்து முனையங்கள் / நிலையங்கள் /அலகுகளில் எச்சரிக்கை பொத்தானுடன் கூடிய கண்காணிப்பு ஏற்பாட்டு முறைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளன.

செயல்பாடு 4: சென்னையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பேருந்துகளை கொள்முதல் செய்தல்

செயல்பாடு 5: சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் 500 மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்தல் (இந்த பேருந்துகள் புகையை வெளியிடாத காரணத்தினால், யாதொரு சுற்றுச்சூழலுக்கும் எந்தவித மாசு ஏற்படுத்தாது)

செயல்பாடு 6: அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களுக்கான இணக்கமான

முறையில், 2213 BS–VI டீசல் பேருந்துகளை கொள்முதல் செய்தல் (BS–IV முந்தைய இணைக்கப் பேருந்துகளுடன் ஒப்பிடும்போது குறைந்த அளவிலான மாசுபாடு)

செயல்பாடு 7: அரசு போக்குவரத்து கழக வளாகங்களின் மேற்கூரையில் சூரிய மின் தகடுகளை அமைத்தல் (இது, அரசு போக்குவரத்துக் கழக வளாகங்கள் இயங்குவதற்கும், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் உதவும். மேலும், கூடுதலான மின்சாரம் மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படும்)

செயல்பாடு 8: மரபு சார்ந்த / சிஃஎப்.எல் பல்புகளுக்குப் பதிலாக எல்இடி பல்புகளை பொருத்துதல் (மின் ஆற்றலை சேமிப்பதற்கு)

## 3. அரசு போக்குவரத்துக் கழகங்கள்

### 3.1 அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு

இயக்கம் என்பது மக்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இது பேருந்து அடிப்படையிலான பொது போக்குவரத்து சேவைகளால் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்து சேவைகள், அரசுக்கு சொந்தமான எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கட்டண நிலை பேருந்துகளை (stage carriage) இயக்குவதன் மூலம் வழங்கப்படுகின்றன. பொது பேருந்து போக்குவரத்து சேவைகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது மாநிலத்தில் கட்டண நிலை இயக்கப்படும் பேருந்துகளில் (stage carriage) 64 சதவீதமாகும். மாநிலத்தில் வழங்கப்படும் போக்குவரத்து சேவையானது இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது: அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகள் மற்றும் தனியார் பேருந்து நிறுவனங்கள் இயக்கும் பேருந்து சேவைகள். அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் அதன் பேருந்து சேவைகள் போக்குவரத்துத் துறையின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை உள்ளடக்கிய மண்டல மற்றும் மாவட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட். | சென்னை | சென்னை பெருநகரப் பகுதி |
| 2. | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை. | சென்னை | தமிழ்நாடு முழுவதும், கேரளா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் புதுச்சேரி |
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட். | விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி |
| | | வேலூர் | வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் |
| | | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு |
| | | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| | | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| | | கடலூர் | கடலூர் |
| 4. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட். | சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| | | தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 5. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட். | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| | | உதக மண்டலம் | நீலகிரி |
| | | ஈரோடு | ஈரோடு |
| | | திருப்பூர் | திருப்பூர் |

| வ. எண் | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட். | கும்பகோணம் | தஞ்சாவூர் |
| | | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை |
| | | திருச்சி | திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| | | கரூர் | கரூர் |
| | | காரைக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| | | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 7. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட். | மதுரை | மதுரை |
| | | திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| | | விருதுநகர் | விருதுநகர் |
| 8. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட். | திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் தென்காசி |
| | | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| | | நாகர்கோவில் | கன்னியாகுமரி |

அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பகுதிகள் கீழே உள்ள படத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.




## 3.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு

அரசு போக்குவரத்துக் கழகங்கள் வாரியான உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் 31.03.2022 அன்றுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | பணிமனைகள் | தொழிற்கூடம் | வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி | பேருந்துகள் | பணியாளர்களின் எண்ணிக்கை | பயணிப்போரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மா.போ.கழகம் | 1 | 31 | 2 | 1 | 3454 | 20936 | 6953.47 |
| 2 | அ.வி.போ. கழகம் | 1 | 22 | 2 | 1 | 1110 | 4869 | 156.03 |
| 3 | அ.போ.க (விழுப்புரம்) | 6 | 60 | 3 | 6 | 3299 | 20754 | 4770.74 |
| 4 | அ.போ.க (சேலம்) | 2 | 32 | 2 | 4 | 2059 | 12109 | 3794.76 |
| 5 | அ.போ.க (கோயம்புத்தூர்) | 4 | 44 | 2 | 2 | 2866 | 16704 | 5272.91 |
| 6 | அ.போ.க (கும்பகோணம்) | 6 | 60 | 4 | 7 | 3441 | 20613 | 8155.92 |
| 7 | அ.போ.க (மதுரை) | 3 | 40 | 3 | 3 | 2302 | 14232 | 4271.41 |
| 8 | அ.போ.க (திருநெல்வேலி) | 3 | 30 | 2 | 2 | 1773 | 10587 | 3926.89 |
| மொத்தம் | | **26** | **319** | **20** | **26** | **20304** | **120804** | **37302.13** |

### 3.3 பேருந்து இயக்கங்கள்

மாநிலத்தில் உள்ள மொத்த அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் எண்ணிக்கை 20,304 ஆகும், அதில் 19,290 வரையறுக்கப்பட்ட பேருந்துகள் 10,417 வரையறுக்கப்பட்ட வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன. வெளியிடப்பட்ட நேர அட்டவணையின்படி, இந்த பேருந்து சேவைகள் ஒப்புக் கொள்ளப்பட்ட பேருந்து நிறுத்தங்களில் அனுமதிக்கப்பட்ட வழியில் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்து சேவைகள், குறிப்பிட்ட நிறுத்தங்களின் அடிப்படையில் வேறுபட்ட கட்டணத்துடன் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன:–

| நகர் பேருந்து | புறநகர் பேருந்து | மலைப் பகுதி |
|---|---|---|
| சாதாரண, விரைவு, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்து, சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்து | சாதாரண, சாதாரண சொகுசு / விரைவு, நவீன சொகுசு, அதிநவீன சொகுசு, குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை), அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன், குளிர்சாதன பேருந்து இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் மற்றும் கழிப்பறை வசதி கொண்ட பேருந்து (Classic) | சாதாரண மற்றும் சொகுசு / விரைவு பேருந்துகள் |


பேருந்து சேவைகளின் விவரங்கள் 31.03.2022 அன்றுள்ளவாறு பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நகர் | | புறநகர்/ விரைவு | மலைப் பகுதி | வரையறுக்கப்பட்ட சேவைகள் | மாற்று பேருந்துகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண / மகளிர் இலவசபயணம் | வரையறுக்கப்பட்ட நிறுத்தங்கள் / விரைவு / சொகுசு | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (6) + (7) |
| மா.போ.க. சென்னை, லிட்., | 1,559 | 1,674 | 0 | 0 | 3,233 | 221 | 3454 |
| அ.வி.போ.க. தமிழ்நாடு, லிட்., | 0 | 0 | 1,082 | 0 | 1,082 | 28 | 1,110 |
| அ.போ.க. (விழுப்புரம்) லிட்., | 1,074 | 0 | 2,063 | 29 | 3,166 | 133 | 3299 |
| அ.போ.க. (சேலம்) லிட்., | 813 | 24 | 1038 | 25 | 1,900 | 159 | 2059 |
| அ.போ.க (கோவை) லிட்., | 1,141 | 182 | 1,037 | 387 | 2,747 | 119 | 2,866 |
| அ.போ.க. (கும்பகோணம்) லிட்., | 1,257 | 28 | 2,050 | 0 | 3,335 | 106 | 3,441 |
| அ.போ.க. (மதுரை) லிட்., | 890 | 380 | 832 | 64 | 2,166 | 136 | 2,302 |
| அ.போ.க, (திருநெல்வேலி) லிட்., | 587 | 229 | 845 | 0 | 1,661 | 112 | 1,773 |
| **மொத்தம்** | **7,321** | **2,517** | **8,947** | **505** | **19,290** | **1014** | **20,304** |

## 3.4 அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்

மாநிலத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறைந்தபட்சம் 1000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமங்களுக்கும் பேருந்து வசதி வழங்குகின்றன. இதன் மூலம் நகர்புறங்களில் உள்ள அனைத்து வாழ்விடங்கள், மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்கள் இணைக்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தினமும் சுமார் 1.7 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர். பொதுப் போக்குவரத்தினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021-ஆம் ஆண்டில் 0.7 கோடியாக தற்காலிகமாக குறைந்து மீண்டும் 2021-2022-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 1.21 கோடியாக உயர்ந்து, அனைத்து கொரோனா பெருந்தொற்று கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்ட பிறகு, மார்ச் 2022-இல் நாளொன்றுக்கு பயணிகளின் எண்ணிக்கை 1.55 கோடியாக அதிகரித்துள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை 2011 முதல் 2021 வரை குறைந்து, பின்னர் 2021-2022-ஆம் ஆண்டில் அதிகரித்து வருவதை கீழ்க்கண்ட வரைபடத்தில் காணலாம்:




இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில், அதிகப்படியான வழித்தடங்களில், பேருந்துகளை இயக்கி வருகின்றன. 29.01.2018 முதல் நடைமுறையில் உள்ள கட்டண அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| சேவை வகைகள் | இயக்க வகைகள் | கட்டணம் (தீர்வை தவிர்த்து) |
|---|---|---|
| நகர பேருந்துகள் (குறைந்தபட்ச கட்டணம்) | சாதாரண | ரூ.4 |
| | குறிப்பிட்ட பேருந்து நிறுத்தம் | ரூ.5 |
| | விரைவு | ரூ.6 |
| | சொகுசு | ரூ.10 |
| | இரவு பேருந்து | ரூ.10 |
| புறநகர் பேருந்துகள் | சாதாரணம் | ஒரு கிலோ மீட்டருக்கு 58 பைசா |
| | சாதாரண சொகுசு | ஒரு கிலோ மீட்டருக்கு 75 பைசா |
| | விரைவு / நவீன சொகுசு பேருந்து | ஒரு கிலோ மீட்டருக்கு 85 பைசா |
| | அதிநவீன சொகுசு | ஒரு கிலோ மீட்டருக்கு 100 பைசா |
| | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை) | ஒரு கிலோ மீட்டருக்கு 130 பைசா |
| | அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | ஒரு கிலோ மீட்டருக்கு 155 பைசா |
| | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | ஒரு கிலோ மீட்டருக்கு 200 பைசா |

**அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண ஒப்பீடு பின்வருமாறு:–**

| மாநிலம் | கடைசியாக கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட நாள் | புறநகர் பேருந்துகள் (ஒரு கிலோமீட்டருக்கு பைசாவில்) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாதாரண | சாதாரண சொகுசு | விரைவு / நவீன சொகுசு பேருந்து | அதிநவீன சொகுசு | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை) | | அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் (குளிர்சாதனமில்லாதது) | | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | |
| | | | | | | வேலை நாட்கள் | இதர நாட்கள் | வேலை நாட்கள் | இதர நாட்கள் | வேலை நாட்கள் | இதர நாட்கள் |
| தமிழ்நாடு | 29.01.2018 | 58 | 75 | 85 | 100 | 130 | 110 | 155 | 135 | 200 | 180 |
| ஆந்திர பிரதேசம் | 13.04.2022 | 83 | 118 | – | 136 | 166 | 166 | – | – | 230 | 230 |
| கர்நாடகா | 26.02.2020 | 66 | 123 | – | 145 | 214 | – | 163 | – | 240 | – |

**அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் 10 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:**

(ரூபாயில்)

| மாநிலம் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் |
|---|---|---|
| தமிழ்நாடு | 8.00 | 12.00 |
| ஆந்திர பிரதேசம் | 15.00 | 25.00 |
| கர்நாடகா | 15.00 | 16.00 |

மேலும், அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் புறநகரப் பேருந்துகளில் 100 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது அதன் விவரம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| மாநிலம் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் | அதிநவீன சொகுசு | குளிர்சாதன பேருந்து கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | இருக்கை | படுக்கை |
| தமிழ்நாடு | 58.00 | 75.00 | 100.00 | 130.00 | 200.00 |
| ஆந்திர பிரதேசம் | 83.00 | 118.00 | 136.00 | 166.00 | 230.00 |
| கர்நாடகா | 66.00 | 123.00 | 145.00 | 216.00 | 240.00 |

## 3.5 இயக்கச் செயல்பாட்டுத் திறன் குறியீடுகள்

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டுத் திறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| பொருள் | 2019-2020 (கொரோனாவிற்கு முன்) | 2020-2021 (கொரோனா காலங்களில்) | 2021-2022 (கொரோனா காலங்களில்) |
|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,513 | 20,670 | 20,304 |
| வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகள் | 19,290 | 19,290 | 19,290 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 83.68 | 60.25 | 73.65 |
| எரிபொருள் செயல் திறன் (கி.மீ / லிட்டருக்கு) சராசரியாக | 5.33 | 5.39 | 5.37 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 2.54 | 2.77 | 2.98 |
| நபர் / பேருந்து ஒன்றுக்கு | 6.45 | 6.35 | 6.26 |

## 3.6 தேசிய அளவிலான விருதுகள்

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சி கழகம் (Petroleum Conservation Research

Association), அதிகபட்ச டீசல் சிக்கனம் (KMPL) செய்யும் மாநில போக்குவரத்துக் கழகங்களை ஊக்குவிக்கும் வகையில் இந்திய அரசின் மூலம் விருதுகள் வழங்கப்படுகின்றன. தேசியளவில் சிறந்த மாநில அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் மாநில அளவில் அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள சிறந்த பணிமனைகளுக்கு பல்வேறு பிரிவுகளில் கோப்பை / பண விருது வழங்கப்படுகிறது. பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சி கழகம் அனைத்து மாநில போக்குவரத்துக் கழகங்களின் எரிபொருள் பயன்பாட்டை கண்காணித்து, நாட்டிலேயே அதிக எரிபொருள் சிக்கனத்திற்கான கழகங்களை தர வரிசைப்படுத்தி வருகிறது. அதிகபட்ச டீசல் சிக்கனத்திற்கு (KMPL) சாதனை புரிந்ததற்காகவும், 2020–2021–ஆம் ஆண்டிற்கான கிராமப்புறங்களில் அதிகபட்ச டீசல் சிக்கனம் (KMPL) மேற்கொண்டு தேசியளவில் வழங்கப்படும் 6 விருதுகளில், சிறந்த போக்குவரத்துக் கழகங்களுக்கான விருதினை, தமிழ்நாடு அரசின் மூன்று போக்குவரத்துக் கழகங்கள் மூன்று பிரிவுகளில் வென்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ எண் | விருது வகை | துணை வகை | விருது வென்றவர் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | அதிகபட்ச டீசல் சிக்கனம் (KMPL) அடைவதற்கான சிறந்த மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கான விருது | குறைந்தபட்ச தகுதி அளவுகோல் 5.0 டீசல் சிக்கனம் (KMPL) | தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்பகோணம்) லிமிடெட். | முதல் இடம் |
| 2 | அதிகபட்ச டீசல் சிக்கனம் (KMPL) அடைவதற்கான சிறந்த மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கான விருது | குறைந்தபட்ச தகுதி அளவுகோல் 5.0 டீசல் சிக்கனம் (KMPL) | தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) லிமிடெட். | இரண்டாம் இடம் |
| 3 | கிராமப்புறங்களில் அதிகபட்ச டீசல் சிக்கனம் (KMPL) அடைவதற்கான தேசியளவில் மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கான விருது | மாநில போக்குவரத்து கழகங்கள் சராசரியாக மாதத்திற்கு 3000 பேருந்துகள் வரை இயக்குகின்றன | தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட். | இரண்டாம் இடம் |

## 3.7 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி செயல்திறன்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க சவால்களாக விளங்குவது அடிக்கடி உயர்த்தப்படும் டீசல் விலை, உதிரி பாகங்களின் விலை உயர்வு, ஊதியம் தொடர்பான பிரச்சனைகள், தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு மற்றும்

கடனுக்கான வட்டிச் செலவு ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவினங்களை ஏற்படுத்துகின்றன. மார்ச் 23, 2020 முதல் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் முழு ஊரடங்கு / பகுதி நேர ஊரடங்கு நீட்டிக்கப்பட்டதன் விளைவாக 2019–2020, 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நிதியிழப்பை சந்தித்துள்ளன. பேருந்துகள் 2019–2020–ஆம் ஆண்டில் 8 நாட்களும், 2020–2021–ஆம் ஆண்டில் 141 நாட்களும், 2021–2022–ஆம் ஆண்டில் 57 நாட்களும் பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டன. 2019–2020, 2020–2021 மற்றும் 2021–2022 (மார்ச் வரை) வரையிலான ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)


| வ.எண் | விவரங்கள் | 2019-2020 (கொரோனாவிற்கு முன்) | 2020-2021 (கொரோனா காலம்) | 2021-2022 (கொரோனா காலம்) தணிக்கைக்கு முன் |
|---|---|---|---|---|
| | வருவாய் | | | |
| 1 | இயக்க வருவாய் | 8827.39 | 3529.92 | 5175.54 |
| | ஒப்பந்த பேருந்து | 6.08 | 58.16 | 17.35 |
| | கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் விற்ற லாபம் | 24.04 | 16.73 | 6.54 |
| | இயக்கம் அல்லாத ஏனைய வருவாய் | 1694.91 | 1842.31 | 3810.90 |
| | இதர கழிவுகள் விற்பனை | 20.09 | 19.36 | 22.16 |
| | மொத்த வருவாய் | 10572.52 | 5466.48 | 9032.49 |
| | செலவு | | | |
| 2 | மாறுபடும் செலவு | | | |
| | உயர்வேக டீசல் எண்ணெய் | 3860.32 | 1961.91 | 3874.30 |
| | இதர செலவுகள் (மசக்கெண்ணெய், டயர், உதிரி பாகங்கள் மற்றும் இதர | 312.15 | 127.15 | 274.60 |
| | மொத்தம் | 4172.47 | 2089.06 | 4148.90 |
| 3 | நிலையான செலவு | | | |
| | சம்பளம் & தினக் கூலி (வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை மற்றும் இதர செலவுகள்) | 8849.63 | 8766.98 | 8475.96 |
| | மோட்டார் வாகன வரிகள் | 196.45 | 105.01 | 170.26 |
| | தேய்மானம் | 540.65 | 635.99 | 393.69 |
| | வட்டி | 1177.65 | 1581.40 | 1884.21 |
| | இதர செலவுகள் (வருங்கால வைப்பு நிதி இழப்பு, சுங்க வரி, விபத்து இழப்பீடு, பங்களிப்பு ஓய்வூதிய வட்டி | 866.23 | 616.57 | 448.21 |
| | மொத்தம் | 11630.61 | 11705.95 | 11372.33 |
| | மொத்த செலவுகள் | 15803.08 | 13795.01 | 15521.23 |
| | இழப்பு | -5230.56 | -8328.53 | -6488.74 |

## 3.8 இயக்கச் செலவினம்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிருவாகச் செலவு மற்றும் அதிவேக டீசல் விலையேற்றம் ஆகியவை முக்கிய செயல்பாட்டுச் செலவினமாகும். 2021–2022–ஆம் ஆண்டில் செலவு கூறுகளின் சதவீதம் பின்வருமாறு:–

| வ. எண். | இயக்கச் செலவு வகைகள் | சதவீதத்தில் |
|---|---|---|
| 1. | சம்பளம் மற்றும் கூலி, வருங்கால வைப்பு நிதி & ஓய்வூதியம், பணிக்கொடை இதர | 54.61 |
| 2. | அதிவேக டீசல் செலவு | 24.96 |
| 3. | மாறுபடும் செலவினங்களான உருளிப்பட்டை, டியூப், உதிரி பாகங்கள் | 1.77 |
| 4. | மோட்டார் வாகன வரி | 1.10 |
| 5. | கடன்களுக்கான வட்டி | 12.14 |
| 6. | இதர செலவு | 5.42 |
| | **மொத்தம்** | **100.00** |

2011 முதல் 2022 வரையிலான ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரங்கள் சதவீதத்தில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.




நிருவாகச் செலவினங்களான சம்பளம், தொழிலாளர் வைப்பு நிதி, பணிக்கொடை போன்ற செலவினங்கள் தற்பொழுது அதிகரித்துள்ளது, அதேபோல மற்ற செலவுகளின்கீழ் வரும் வட்டிக்கான செலவினங்களும் அதிகரித்துள்ளது. டீசல் விலை மற்றும் பராமரிப்பு செலவுகள் போன்றவை சந்தை அடிப்படையிலான விலை மற்றும் பயன்பாட்டின் அளவு ஆகியவற்றுடன் தொடர்புடையது, கொரோனா ஊரடங்கு காலத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தளர்வுகளின் காரணமாக இரண்டு அளவுருக்களும் 2020–2021–ஐ விட 2021–2022–இல் (மார்ச் வரை) அதிகரித்துள்ளன.

### 3.9 அரசின் நிதியுதவி

கொரோனா பெருந்தொற்று பேரழிவு காலகட்டத்தில் அரசின் நிதியுதவியினால் போக்குவரத்துக் கழகங்கள் நிலைத்திருக்கின்றன. புதிய பேருந்துகளை கொள்முதல் செய்தல், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருதல் மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு சட்டரீதியான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குதல் போன்றவற்றிற்காக பங்கு மூலதன உதவி, கடன்கள், வழிவகை முன்பணம் மற்றும் மானியத்தின் மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்கி, அரசு போக்குவரத்துக் கழகங்களை ஆதரித்து வருகிறது. மாணவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் இதர இலவச பேருந்து கட்டணப் பயண அட்டைதாரர் போன்ற பல்வேறு பிரிவினரால் ஏற்படும் நிதி இழப்பீட்டினை, போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்கிறது. அதிவேக டீசலின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பினை திரும்பப் பெறவும் அரசு அனுமதித்துள்ளது. 2022-2023-ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | பொருள் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–2023 |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கான பங்கு மூலதன நிதியுதவி (KfW) | 386.89 |
| 2. | மாணவர்களுக்குப் பேருந்துக் கட்டண வகையில் வழங்கும் சலுகைக்காக ஏற்படும் சமுதாயச் செலவை ஈடுசெய்தல் | 928.00 |
| 3. | மகளிருக்கு இலவசப் பேருந்து பயண அனுமதிச்சீட்டு வழங்கியதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்தல் | 1520.00 |
| 4. | அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கடன் (KfW) வழங்குதல் | 1073.89 |
| 5. | மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டு வழங்குவதால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்தல் | 52.00 |
| 6. | அதிவேக டீசல் எண்ணெய் விலையேற்றம் / மேல்வரி விதிப்பு காரணமாக ஏற்படும் விலை வித்தியாசத் தொகையை திரும்ப வழங்குதல் | 1300.00 |
| | **மொத்தம்** | **5260.78** |

## 3.10 கடன்களுக்கான அரசு உத்தரவாதம்

தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் கொரோனா பெருந்தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தியாவசிய சேவைகளை தவிர மற்ற சேவைகள் அனைத்தும் நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டன. அதன் விளைவாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. மெதுவாக தளர்வுகள் செய்யப்பட்டதற்கேற்ப, அத்தியாவசிய பணிகளுக்காக தேவைப்படும் பேருந்துகள் இயக்கப்பட்டன. இயக்க வருவாய், டீசல் செலவு மற்றும் அத்தியாவசிய பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்டும் அளவே இருந்தது. 2021–2022–ஆம் நிதியாண்டில், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் பொருட்டு அவற்றின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து ரூ.2,955.891 கோடியினை கடன் பெறுவதற்காக அரசு உத்தரவாதம் வழங்கியுள்ளது. அரசாணை (நிலை) எண்.80, போக்குவரத்து (ட்டி.1) துறை, நாள்: 03.08.2021–ன்படி, ஜூன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரையிலான காலங்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செயல்பாட்டு தேவைகளைப்

பூர்த்தி செய்வதற்காக ரூ.1,500.81 கோடியினை கடனாக பெறுவதற்கு அரசின் உத்தரவாதத்தை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.15, போக்குவரத்து (ட்டி.1) துறை, நாள்: 04.02.2022–ன்படி, அக்டோபர் 2021 முதல் டிசம்பர் 2021 வரையிலான காலங்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செயல்பாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூ.1,455 கோடியினை கடனாக பெறுவதற்கு அரசின் உத்தரவாதத்தை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**3.11 பொது சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்**

**i) புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகம் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்குதல்.**

புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்துவது என்பது பொதுமக்களின் நன்மைக்காகவும், கோரிக்கையின் அடிப்படையில் புதிய பகுதிகளை இணைப்பது போன்ற தொடர்ச்சியான செயல்முறையாகும். 07.05.2021 முதல் 31.03.2022 வரை 122 நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் 152 பேருந்து சேவைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதேபோன்று, முன்பு நிறுத்தப்பட்ட சில வழித்தடங்களுள் 328 வழித்தடங்களில் 394 பேருந்து

சேவைகள் அரசால் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நீட்டிக்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்) | | மீண்டும் தொடங்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்) | |
|---|---|---|---|---|
| | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் |
| மா.போ.க. சென்னை, லிட்., | 25 | 36 | 53 | 105 |
| அ.வி.போ.க தமிழ்நாடு, லிட்., | 13 | 28 | 8 | 16 |
| அ.போ.க (விழுப்புரம்) லிட்., | 50 | 52 | 59 | 59 |
| அ.போ.க (சேலம் | 0 | 0 | 4 | 6 |
| அ.போ.க (கோயம்புத்தூர்) லிட்., | 8 | 10 | 13 | 13 |
| அ.போ.க (கும்பகோணம்) லிட்., | 14 | 13 | 79 | 74 |
| அ.போ.க (மதுரை) | 0 | 0 | 51 | 55 |
| அ.போ.க (திருநெல்வேலி) | 12 | 13 | 61 | 66 |
| **மொத்தம்** | **122** | **152** | **328** | **394** |

### ii) சென்னையில் சிறிய பேருந்துகள் இயக்கம்

சென்னையில் உள்ள பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு, சாதாரண பேருந்துகள் இயக்க இயலாத குறுகலான சாலை உள்ள பகுதிகளுக்கு

சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் 207 சிறிய பேருந்துகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் தற்போது இயக்கப்படும் 146 சிறிய பேருந்துகளுடன், நகரத்தின் உள்பகுதிகளை மெட்ரோ ரயில் நிலையத்துடன் இணைத்து இயக்கப்படும் 44 சிறிய பேருந்துகளும் அடங்கும். இந்த 44 சிறிய பேருந்துகளில் 14 சிறிய பேருந்துகள் குறிப்பாக மெட்ரோ இரயில் நிலையத்தை இணைக்கும் பொருட்டு இயக்கப்படுகின்றன. இயக்கப்படாத சிறிய பேருந்துகளை சிறந்த முறையில் பயன்படுத்த, மாநகரப் போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும் இணைந்து மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனால் மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கான வருவாய் அதிகரிக்கும்.

### iii) மின்னணு முறையில் பயணச்சீட்டு முன்பதிவு

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மின்னணு முறையில் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. பயணிகள் எந்த இடத்திலிருந்தும் 24 மணி நேரமும் பேருந்து

பயணச்சீட்டினை இணையவழியில் முன்பதிவு செய்யலாம். பயணங்களைத் திட்டமிடுவதற்கும், விருப்பங்களுக்கு ஏற்ப பயணத்தை வடிவமைப்பதற்கும், புறப்படும் மற்றும் வருகைக்கு மிகவும் வசதியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் பயணிகளுக்கு மின்னணு முறையில் முன்பதிவு வழிவகுக்கிறது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலை தூரப்பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளமான https://www.tnstc.in மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதனை TNSTC செயலியின் மூலமும் முன்பதிவு செய்யலாம். 2021–2022–ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட மொத்த பயணச்சீட்டுகளில் 76.06% மின்னணு முறையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

**iv) மின்னணு முறையில் ஏலமிடுதல்**

2012–ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி–இன் (M/s MSTC) மூலம் கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவுப் பொருட்கள் மின்னணு முறையில் ஏலமிட அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை மூலம், கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவு

செய்யப்பட்ட உதிரி பாகங்கள் சிறந்த விலையைப் பெற முடிகிறது. கொரானோ பெருந்தொற்று காரணமாக, மின்னணு–ஏலம் நிறுத்தப்பட்டது. கொரானோ பெருந்தொற்று கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பிறகு, இந்திய அரசாங்கத்தின் தேசிய தகவல் மையம் (NIC) மூலம் மின்னணு–ஏலம் மற்றும் மின்னணு ஒப்பந்த முறையை 2021–ஆம் ஆண்டு முதல் சோதனை அடிப்படையில் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்திய அரசின் இம்முன்னோடி திட்டத்தினை மாநகரப் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தேசிய தகவல் மையம் மூலம் பயன்படுத்தி வருகிறது. அதன்படி, கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை தேசிய தகவல் மையத்தின் (NIC) மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**3.12 பேருந்துகளை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:–**

**i) தமிழகத்திலுள்ள நகரங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நவீன பேருந்து சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகளுடன் BS–VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்தல்**

உலகம் முழுவதும் பொதுப் போக்குவரத்தில் மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. இந்தியா மற்றும் தமிழ்நாடு இதற்கு விதிவிலக்கல்ல. தரமான பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தாமல், சாலைகளில் அதிக அளவிலான முதலீடுகள் செய்வது அதிக தனிப்பட்ட போக்குவரத்து முறைகளைப் பின்பற்றுவதற்கு வழிவகுக்கிறது. இது உயிரிழப்புகள், காற்று மாசுபாடு, நெரிசல் போன்ற பல எதிர்மறையான வெளிப்படையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. மாறிவரும் தன்மைக்கேற்ப நுகர்வோரின் முன்னுரிமை, நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு, தொழில்நுட்பத்தில் புதுமைகள் மற்றும் மேம்பாடுகள், கட்டண முறை, வாகனத்தின் இயக்கத்திற்கான மாற்று எரிபொருள் போன்றவை அரசு பொது போக்குவரத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு உந்தப்படுகிறது. இதன் மூலம் வயது முதிர்ந்த பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் வாங்குவதற்கு தமிழக அரசு ஜெர்மனி வளர்ச்சி வங்கியுடன் (KfW) 12,000 BS–VI பேருந்துகள் மற்றும் 2,000 மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, 2021–ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் 80% (KfW) வட்டியில்லா கடனாகவும், 20% தமிழக அரசு பங்கு என்ற விகிதத்தில் செலவின பகிர்வு என்ற

அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. டீசல் பேருந்துகள் ஏழு போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர), மின்சாரப் பேருந்துகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் இயக்கப்படும்.

முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக 2,213 டீசல் பேருந்துகளும், 500 மின்சாரப் பேருந்துகளும் (முதற்கட்டமாக 100 மின்சாரப் பேருந்துகளும் மற்றும் அதன் தொடர்ச்சியாக 400 மின்சாரப் பேருந்துகளும்) ரூபாய் 2,032 கோடி திட்ட மதிப்பீட்டில் வாங்கப்பட உள்ளன. அரசு போக்குவரத்து கழகங்களின் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்களை மேம்படுத்துவது, பயணிகள் தகவல் அமைப்பு, பணமில்லா பரிவர்த்தனை முறை போன்றவை இதன் இதர முக்கிய முதலீட்டு கூறுகளாகும்.

**ii) நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பின் சிறந்த இயக்கம் மற்றும் மேம்பாடு**

ஜப்பான் (JICA) நிதியுதவி திட்டத்தின் மூலம் மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கான தீர்வு ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பு (ITMS) மூலம் கிடைக்கிறது, இவ்வமைப்பு, தானியங்கி வாகன

இருப்பிடம் கண்டறியும் அமைப்பு, பேருந்து முனையங்களில் பயணிகள் தகவல் அமைப்பு, பேருந்து நிறுத்தங்கள் மற்றும் செயலி / வலைதளங்களின் பயன்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பணிமனைகளை நிர்வகிக்கும் முறை என்பது வாகன இயக்கம் தொடர்பான திட்டமிடல் மற்றும் அட்டவணைப்படுத்துதல், வாகனம் அனுப்புதல், பணியாளர்களின் வேலைமுறை பட்டியல், வருகை மேலாண்மை மற்றும் அனைத்து பணியாளர்களுக்கான செயலி பிரத்யேக பயன்பாடு என்பதாகும். மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் இத்திட்டத்திற்கான, மொத்த திட்டச் செலவு ரூ.136 கோடி. இத்திட்டத்திற்கு ஜப்பான் நிதியுதவி பங்கு மூலம் 51 சதவீதம் மற்றும் மாநில அரசு பங்கு மூலம் 49 சதவீதம் ஆகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்வு செய்வதற்காக சென்னை சீர்மிகு நகரம் லிமிடெட் செயல்படுத்தும் முகமையாக செயல்படுகிறது.

**iii) மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை சேவை மாற்றத்திற்கான முடிவுகளுக்கான திட்டம்**

இத்திட்டம் உலக வங்கி ஆதரவுடன் செயல்படுத்தப்படும். சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின் ஒரு பகுதியாகும். பொது பேருந்து சேவை ஒப்பந்தமானது (PTSC) தமிழ்நாடு அரசு மற்றும் மாநகரப்

போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றிற்கிடையே தற்போதுள்ள பேருந்துகளின் ஆற்றலை மேம்படுத்த வெளிப்படையான நிதியுதவி செய்வதே இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும். நிதியுதவி மாநகரப் போக்குவரத்துக் கழகம் அடையக்கூடிய குறியீடுகளை பொருத்திருக்கும். புதுமையான இயக்க முறையின் மூலம் தற்போதுள்ள பேருந்துகளுடன் புதிய பேருந்துகள் இயக்கப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.855.4 கோடியாகும். இதில் 70 சதவீகிதம் உலக வங்கியும் 30 சதவீதம் தமிழக அரசும் நிதியுதவி செய்யும். இதற்கான வணிகத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**iv) பெண்கள் பாதுகாப்பு நகரத் திட்டம்**

பொது இடங்களில் குறிப்பாக பேருந்துகள், பேருந்து நிலையங்கள், பேருந்து பணிமனைகள் போன்ற பொது போக்குவரத்து அமைப்புகளில் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் அதிகாரமளிக்கும் சூழலை உருவாக்குவதை பாதுகாப்பான நகரத் திட்டத்தின்கீழ் நிர்பயா திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெண்களின் பாதுகாப்பிற்காக, 2500 பேருந்துகளில் 66 பேருந்து முனையங்கள் / பணிமனைகள் / அலகுகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் மற்றும் அவசரத் தேவைகளுக்கான எச்சரிக்கை அழைப்பு பொத்தான்கள் அமைத்தல் போன்றவற்றின் மூலம்

பேருந்துகளைக் கண்காணிப்பதன் மூலம் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட உள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழக வளாகத்தில் ஒரு புதிய கட்டளை கட்டுப்பாட்டு மையத்தை உருவாக்குவது திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டம் ரூ.72.71 கோடி செலவில் இந்திய அரசு மற்றும் மாநில அரசின் 60:40 என்ற விகிதாச்சார பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கும் இயக்குவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திட்டக் கூறுகளை பொருத்தும் பணியில் உள்ளார். இத்திட்டத்தின் முன்னோட்டமாக 500 பேருந்துகள் மற்றும் 30 பேருந்து முனையங்கள் / பணிமனைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**v) பயணிகள் தகவல் அமைப்பு**

சென்னையில் பேருந்து பயணிகள் பேருந்திற்காக காத்திருக்காமல் பேருந்து பயணத்தை திட்டமிடுவதற்கு நேரடி பயணிகள் தகவல் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இக்கைபேசி செயலி தேர்ந்தெடுக்கப்பட்ட பேருந்தின் புறப்பாடு, சேருமிடம் மற்றும் வழியினை வரைபடத்தில் காண்பிக்கும். மேலும், அந்த வழித்தடத்தில் ஓடும் பேருந்துகளின் தற்போதைய இருப்பிடம், அந்த பேருந்து நிறுத்தத்திற்கு அடுத்து வரும் 5 பேருந்துகள் வந்து சேரும் நேரம், வழித்தட எண்கள், அருகிலுள்ள பேருந்து

நிறுத்தங்களின் பட்டியல் போன்றவற்றுடன் அந்த நபரின் தற்போதைய இருப்பிடத்தினையும் காட்டுகிறது. ஏதேனும் ஒரு பேருந்தை தேர்ந்தெடுத்து பயணிக்கும்போது, அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தை எப்போது வந்தடையும் என்பதை பயணிகள் அறிந்து கொள்ளலாம். இச்செயலி சோதனை ஓட்டத்தில் உள்ளது. வணிக ரீதியான இயக்கம் தொடங்கப்பட்டதும், தமிழகத்திலுள்ள அனைத்து பேருந்துகளின் செயல்பாடு இச்செயலியின்கீழ் கொண்டு வரப்படும். வலைதளத்தின் மூலமாகவும் இதனை அணுகலாம்.

**vi) புவியிட அமைப்பு (GPS) அடிப்படையிலான தானியங்கி பேருந்து நிறுத்த அறிவிப்பு அமைப்பு**

நெரிசல்மிகு நேரங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு பேருந்து நிறுத்த அறிவிப்பு அமைப்பு உதவியாக இருக்கும். ஏனெனில் அவர்கள் பேருந்து நிறுத்தங்களை அறிந்துகொள்ள மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

இவ்வமைப்பு 75 பேருந்துகளில் சோதனை அடிப்படையில் மதுரை நகரத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்டால் ஆரம்பிக்கப்பட்டது. இது பொது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இவ்வமைப்பு மூலம் அடுத்து வரும் பேருந்து நிறுத்தத்தின் பெயரினை 100

மீட்டருக்கு முன்னர் அறிவிக்கப்படும் சென்னை மற்றும் திருநெல்வேலியில் இந்த முறை ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பேருந்து நிறுத்த அறிவிப்பு இடைவெளியில் விளம்பரங்கள் ஒளிபரப்பப்படும். ஒவ்வொரு பேருந்திலும், 6 ஒலிப்பான்கள் (Speaker) மற்றும் 1 ஒலிபெருக்கியுடன் (Amplifier) புவியிட அமைப்பு (GPS) சாதனத்தை செயல்படுத்துபவர் நிறுவ வேண்டும். இதன் மூலம் போக்குவரத்துக் கழகம் எந்த முதலீடும் செய்யாமல் கூடுதல் வருவாய் ஈட்டும்.

**vii) பேருந்துகளில் பக்கவாட்டு பாதுகாப்பு அலகு**

பேருந்து பக்கவாட்டு பாதுகாப்பு அலகு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக பயணிகள் பேருந்துகளில் ஏறும் போதும், இறங்கும் போதும், சாலைகளில் நடந்து செல்பவர்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களில் பயணிப்போரும் வாகன விபத்துகளில் பேருந்துகளின் பின்புற சக்கரங்களில் சிக்காமல் பாதுகாப்பதற்காக உதவுகிறது. இது பெருமளவு உயிர் இழப்புகளை குறைப்பதுடன், பெரும் காயங்கள் மற்றும் உயிர் இழப்பை தடுக்கிறது. பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் 71 பேருந்துகளில் நிறுவப்பட்டுள்ளது.

**viii) மாநகரப் போக்குவரத்துக் கழகத்திலுள்ள பேருந்து நிலையங்கள் / பேருந்து முனையங்களை வருவாய் ஈட்டக் கூடியதாக மேம்படுத்துதல்**

இயக்க வருவாய் கொரோனா பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையை எட்டியிருந்தாலும், பயணக் கட்டணம் மூலம் பெறக்கூடிய வருமானம் செலவுகளைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லாததால், பயணக் கட்டணமற்ற வருவாயைப் (Non fare box revenue) பெருக்குவதற்கு, போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்துக்களின் மூலம் வருவாயினை பெருக்குவது என்பது காலத்தின் தேவையாகும். இதர வருவாய்களை பெருக்குவதற்கு உந்துதலாக உள்ள முக்கிய ஆதாரமான சொத்துகள் அதாவது சென்னை போன்ற பெருநகரங்களில் மற்றும் பிற நகரங்களில் உள்ள பேருந்து நிலையங்கள், நகரங்களின் மத்திய வணிக பகுதிகளில் உள்ள இடங்கள் ஆகியவற்றின் மூலம் வருவாய் ஈட்டலாம். இதன் அடிப்படையில், மாநகரப் போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டிலுள்ள 16 பேருந்து பணிமனைகள் / முனையங்களை நவீனப்படுத்துவதற்கும், வணிக வளர்ச்சி அடைய செய்வதற்கும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தமிழ்நாடு உட்கட்டமைப்பு

மேம்பாட்டுக் கழகத்தின் (TNIDB) மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**3.13 கட்டணச் சலுகைகள்**

பொதுப் போக்குவரத்துப் பேருந்தில் குறைந்த கட்டணத்திலோ, கட்டணம் இல்லாமலோ அல்லது சலுகைக் கட்டணங்கள் அடிப்படையில் குறிப்பிட்ட பிரிவினருக்கு பயணச் சலுகைகள் வழங்கப்படுகிறது. குறைந்த வருமானம், கல்வி மேம்பாடு, ஒரு குறிப்பிட்ட நோய்க்காக அடிக்கடி மருத்துவமனைக்கு செல்வது, மூத்த குடிமக்கள் போன்றவர்களுக்கு சலுகைகள் வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**i) பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:–**

1. நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.
2. பெண் பயணிகள், திருநங்கைகள், 40% மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்.
3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்.

4. மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.
5. புற்று நோயாளிகள்.
6. நாடகக் கலைஞர்கள் அவர்கள் கொண்டு வரும் இசைக் கருவிகள்.
7. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்.
8. மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (60 வயதிற்கு மேற்பட்டோர்) – குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

**ii) மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்**

மாநிலத்தில் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை ஊக்குவிக்கவும், சமுதாயத்தில் அவர்களின் நிலையை மேம்படுத்தவும், இளைஞர்கள் தங்களது தரத்தை மேம்படுத்தி சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் பெருளாதார நிலையை அடையவும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) பயணம் செய்யும்

மாணவர்களுக்கு கீழ்க்கண்ட கட்டணமில்லா பயணச் சலுகைகளை வழங்குகிறது.

1. அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் (1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை).
2. தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப்பள்ளி.
3. அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.
4. அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
6. சமுதாயக் கல்லூரிகள்.
7. அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
8. இசைக் கல்லூரிகள்.
9. சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

**iii) 50% பயணக் கட்டணச் சலுகை**

1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகள்
2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்
3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பொறியியல் கல்லூரிகள்

**iv) விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச்சீட்டுகள்**

நகரங்களில், குறிப்பிட்ட பணியாளர்கள் தங்கள் பணி தொடர்பான பயணங்களுக்காக ஒரு நாளில் பல பயணங்களை மேற்கொள்கின்றனர். சென்னை மற்றும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் இதுபோன்ற வகைப் பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில், நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாதாந்திரப் பயணச் சீட்டானது, ரூ.1,000/– கட்டண விகிதத்தில் விருப்பம் போல் பயணம் செய்ய, பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

**v) மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை**

வழக்கமான பேருந்துப் பயணிகளின் நலனுக்காக, மாநகர் / நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது புறநகர் பேருந்துகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தினந்தோறும் பயணம் செய்யும் பொது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இச்சலுகைகளை வழங்குவதினால் ஏற்படக்கூடிய இழப்புத் தொகை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

**vi) குழு பயணச்சீட்டு சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்டில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் குழுவாக பயணச்சீட்டு முன்பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

## 2.14 பணியாளர் தொடர்பான நல நடவடிக்கைகள்

### ஊதிய ஒப்பந்தம்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிற் தகராறு சட்டம், 1947 பிரிவு 12(3)–ன்கீழ் ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும். 1977 முதல், அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களுடன் 13 ஊதிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் தகுதியான பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் இதர சலுகைகளை நிர்ணயம் செய்ய நிருவாகம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே 14–வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

### இதர நல நடவடிக்கைகள்:–

பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக அரசு போக்குவரத்துக்

கழகங்கள் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன:–

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்பு ஊதிய சம்பள உயர்வு / ஆய்வு பலன்கள்
2. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு வழங்கப்படும் தினப்படி.
3. 12(3)–வது ஊதிய ஒப்பந்தத்தின் கீழ் வரும் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை
4. போனஸ், பொங்கல் ஊக்கத்தொகை
5. விடுப்பு பலன்கள்
6. திருப்பான் படி(Steering Allowance)
7. சலுகைக் கட்டண உணவக வசதி மற்றும் தீபாவளி பண்டிகைக்கு இனிப்புகள் வழங்குதல்.
8. இலவச சீருடைகள் மற்றும் சலவைப்படி
9. பணியாளர்களின் வாரிசுதாரர்களின் திருமண முன் பணம்.
10. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.
11. உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ஈடு செய்தல்.
12. இறுதிச் சடங்குச் செலவுகள் ரூபாய் 3,000/–.
13. பணியாளர்களின் குழந்தைகள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு.

14. இறந்த பணியாளர்களின் குடும்ப நல நிதி ரூ. 3,00,000/-
15. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதி வசதிகள்.
16. வழக்கமான மருத்துவ பரிசோதனை
17. ஓட்டுநர்களுக்கான இலவச கண் பரிசோதனை
18. பணியிலுள்ள பணியாளர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
19. பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இலவச பயண அட்டை (ஒரு வருடத்திற்கு 5500 கி.மீ)
20. பண்டிகை முன்பணம் ரூ.10,000/-
21. 31.03.2003-க்கு முன்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதிய திட்டம் 1998 நடைமுறையில் உள்ளது. 31.03.2022 அன்றுள்ளவாறு, மொத்தம் 84,250 ஓய்வூதியதாரர்கள் உள்ளனர்.
22. பணிமனைகள் மற்றும் சென்னை போன்ற முக்கிய பேருந்து நிலையங்களில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க ஓய்வு அறைகள்.
23. யோகா, மன அழுத்திற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள்.
24. இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பணியாளர்களுக்காக சிறப்பு பேருந்து இயக்கம்.
25. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு

பொறியியல் கல்லூரி மற்றும் அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி.**

1998–ஆம் ஆண்டு ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்கள் பணியாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர வழங்கல் சட்டம் 1952–ன்கீழ் இருந்து வந்தனர். அதன்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கும் தனி ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக, 01.09.1998 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியின் முக்கிய செயல்பாடானது, இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்ள தகுதியுள்ள ஓய்வுபெற்ற / விருப்பார்ந்த ஓய்வுபெற்ற / காலமான ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை சரிபார்த்து, மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குவது ஆகும். மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுவதைத் தவிர, சரிபார்ப்பு மற்றும் ஓய்வூதியக் கொடுப்பாணை வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு, ஓய்வூதியம் பெறுவோரின்

குறைகளுக்கு தகுந்த பதில்கள் அளிக்கப்படுகிறது. 01.09.1998 அன்று பணியில் இருந்த பணியாளர்கள் மற்றும் 31.03.2003 அன்று அல்லது அதற்கு முன் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் இந்த 1998–ஆம் ஆண்டு ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் மொத்தம் 1.28 லட்சம் பணியாளர்கள் உள்ளனர். 2021–2022–ஆம் நிதியாண்டில், ஓய்வூதியப் பலன்கள் 84,250 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஆண்டு ஓய்வூதியத் தொகையாக ரூ. 1,293.15 கோடி வழங்கப்பட்டுள்ளது. இவ்ஓய்வூதிய திட்டத்தின்கீழ் வரும் ஓய்வூதியதாரர்களின் மொத்த மாத ஓய்வூதியம் சராசரியாக ரூ.108 கோடி ஆகும்.

**சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை அளிப்பது**

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சேமநல நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு ஊதியம், ஓய்வூதிய ஒப்பளிப்பு மற்றும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் போன்ற சட்டரீதியான ஓய்வூதியப் பணப் பலன்களை வழங்குவதற்கான நிதி ஆதாரம் இல்லை. மேற்கண்ட சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கும் பொருட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, குறுகிய கால கடன்கள் மற்றும்

வழிவகை முன்பணம் ஆகியவற்றின் மூலமாக அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகின்றது.

**3.15 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்**

தனியார் வாகனங்களைப் போல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வாகன காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இணையவில்லை. வாகன விபத்துகளால் பாதிக்கப்படுபவர்கள் மாண்பமை நீதிமன்றங்களின் மூலம் விபத்து இழப்பீடு பெற வழக்கு தொடர்ந்து, நிவாரணம் பெறுவதற்கு கால அவகாசம் ஏற்படுகிறது. அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு, 2010–2011–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ரூ.20 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.40 கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியுமாக உள்ளது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

20.01.2018 முதல் பேருந்து பயணிகளிடம் தீர்வை (Cess) வசூல் செய்து அதனைக் கொண்டு விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இதற்கென தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வைக் கட்டணம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| வ. எண். | பயண கட்டண விலை | நகர் | புறநகர் |
|---|---|---|---|
| | | பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை | பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை |
| 1. | ரூ.25 வரை | 1 | 1 |
| 2. | ரூ.26 முதல் ரூ.50 வரை | – | 2 |
| 3. | ரூ.51 முதல் ரூ.75 வரை | – | 3 |
| 4. | ரூ.76 முதல் ரூ.100 வரை | – | 4 |
| 5. | ரூ.101 முதல் ரூ.200 வரை | – | 5 |
| 6. | ரூ.201 முதல் ரூ.300 வரை | – | 6 |
| 7. | ரூ.301 முதல் ரூ.400 வரை | – | 7 |
| 8. | ரூ.401 முதல் ரூ.500 வரை | – | 8 |
| 9. | ரூ.501 –க்கு மேல் | – | 10 |

20.01.2018 முதல் 31.03.2022 வரை ரூ.1,655.11 கோடி தீர்வையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.593.90 கோடி சுங்க கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. விபத்து இழப்பீட்டு கோரிய 12,377–ல், விபத்து இழப்பீட்டுத் தொகையாக ரூ.667.11 கோடி நேர் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, நீதிமன்ற உத்தரவின்படி, 8125 வழக்குகளுக்கு ரூ.426.20 கோடியும், மக்கள் நீதி மன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட 4252 வழக்குகளுக்கு ரூ.240.91 கோடியும் விபத்து இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

## 3.16 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.

மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னையை தலைமையிடமாக கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கழகம், சென்னை நகரில் பொது போக்குவரத்து பேருந்துகளை இயக்கும் தனியுரிமை பெற்றுள்ளது. இக்கழகம் சென்னை பெருநகர் மற்றும் அதன் அருகிலுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகின்றது.

31.03.2022 அன்றுள்ளவாறு, மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ.எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 1 |
| 2. | பணிமனைகள் | 31 |
| 3. | தொழிற்கூடங்கள் | 2 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 1 |
| 5. | பேருந்துகள் | 3,454 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 20,936 |

- இக்கழகம் 31 பணிமனைகளையும், 3,454 பேருந்துகளை கொண்டு 3,233 சேவைகளை

604 வழித்தடங்களில் இயக்கி வருகின்றன. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 20,936 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவு பேருந்து, சொகுசு பேருந்து மற்றும் குளிர்சாதன பேருந்து சேவைகளை வழங்கி வருகின்றன.

- இக்கழக பேருந்துகளின் பக்கவாட்டிலும் மற்றும் உள்ளேயும் விளம்பரங்கள் செய்வதன் மூலம், இதர வருவாயினை ஈட்ட முயற்சிகளை எடுத்து வருகிறது. பொது மக்களுக்கு பெட்ரோல் / டீசல் விநியோகம் செய்வதற்கான சில்லறை விற்பனை நிலையங்களை அதன் சொந்த நிலத்தில் அமைப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.
- இக்கழகத்தின் வணிக வளர்ச்சிக்காக, 16 பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன. இதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடனும் மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேலாண்மை நிதி வாரியத்தின் ஒருங்கிணைப்புடன் (TNIFMC) தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- நகர்ப்புற பெண்களுக்கான பாதுகாப்பு திட்டத்தின்கீழ், சென்னையில் பொது இடங்களில் மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை, அகற்றுவதற்கும், பெருநகரப் பகுதிகளில் பெண்களுக்கு பாதுகாப்பு உணர்வினை அளிப்பதற்கும் மற்றும் பாதுகாப்பிற்காகவும் நிர்பயா நிதியானது ஏற்படுத்தப்பட்டுள்ளது, இத்திட்டத்தின் நோக்கம் குழந்தை மற்றும் பெண் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இணைய நெறிமுறை (Internal Protocol) அடிப்படையிலான மறைகாணிகளை (CCTV Cameras) மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகள், பணிமனைகள் மற்றும் பேருந்து முனையங்கள் ஆகியவற்றில் பொருத்துவதன் மூலம் அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. பேருந்துகளில் இருக்கும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் நிகழ்வுகள் பதிவு செய்யப்படும், மேலும், தேவைப்படும் போது அதன் நடப்பு நிகழ்வுகள் கட்டளை கட்டுப்பாட்டு மையத்திலிருந்து கண்காணிக்கப்படும். அவசர கால எச்சரிக்கை அழைப்பு (SOS Panic) பொத்தானை அழுத்தும் போது அவசரகால

பதிலுக்காக மாநகரப் போக்குவரத்துக் கழக கட்டளை கட்டுப்பாட்டு மையம் மற்றும் காவல் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்படும். 2500 மாநகரப் பேருந்துகளிலும், பணிமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் பிற அலகுகளில் (Units) 66 இடங்களிலும் மறைகாணிகள் (CCTV Cameras) பொருத்தும் பணி ரூ.72.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- புவிசார் குறியீடு மூலம் அனைத்து பேருந்து நிறுத்தங்களும் தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளன. துல்லியமான இருப்பிடம் கண்டறியும் முறை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பேருந்து எந்த இடத்தில் வந்து கொண்டிருக்கிறது என்பதை பயணிகள் கண்டறிய கைபேசி செயலி உருவாக்கப்பட்டு உள்ளது. இது வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளின் இருப்பிடம், ஒரு குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்திற்கு பேருந்து வருகை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள நேரம், பயணிகளுக்கு அருகிலுள்ள பேருந்து நிறுத்தம் போன்ற தகவல்களை வழங்குகிறது. இச்செயலி மூலம் பயணிகள் தங்கள் பயணத்தைத் திட்டமிட்டு பயணிக்கலாம். இது சோதனை அடிப்படையில் உள்ளது.

- இக்கழகத்தை உலகத்தரம் வாய்ந்த பொதுப் போக்குவரத்து நிறுவனமாக மாற்றுவதற்கான வணிகத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில், தமிழ்நாடு அரசுக்கும் இக்கழகத்திற்கும் இடையே பொது போக்குவரத்துக் சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதும், அத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட DLI–களை அடைவதன் மூலம் ஏற்கனவே உள்ள பேருந்துகளுடன் புதிய பேருந்துகளையும் கொண்டுவர நீண்ட கால நிதியுதவி வழங்கப்படும்.
- நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை முறை சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேம்படுத்தபட்ட நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT) பயன்படுத்தி பேருந்துகள் இயக்கம், பேருந்து இயக்க அட்டவணை கடைபிடித்தல், பணிமனைகளில் இருந்து வாகனங்களை அனுப்புதல், பணிமனை மேலாண்மை மற்றும் நிகழ்நேர பேருந்து இயக்க தகவல்களை வழங்குதல் ஆகியவற்றை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. மேலும், பேருந்துகளின் இயக்க

தகவல்கள் நேரலையாக கீழ்க்கண்ட முறைகளில் பயணிகளுக்கு வழங்கப்படுகிறது.

1. தானியங்கி வாகன இருப்பிடம். (Automatic Vehicle Location)
2. பயணிகள் தகவல் அமைப்பு. (Passenger Information System)
3. பணிமனைக்களுக்கான மேலாண்மை அமைப்பு (இயக்கம் தொடர்பான)

- சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த, 71 பேருந்துகளுக்கு பேருந்து பக்கவாட்டு பாதுகாப்பு அலகு (Under Run Protection Unit) பொருத்தப்பட்டுள்ளது.
- இக்கழகம், காற்று மாசினை கட்டுப்படுத்திடவும் இயக்க செலவினை குறைத்திடவும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) / திரவ இயற்கை எரிவாயு (LNG) பேருந்துகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

**3.17 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.**

இக்கழகம், நீண்டதூரப் பயண சேவைகளை வழங்குவதற்கென்று பிரத்தியேகமாக நிறுவப்பட்டது. இது, பணிச் சூழலுக்கேற்ற இருக்கைகள் மற்றும் படுக்கை வசதி கொண்ட சொகுசான பேருந்துகளை இயக்குகிறது. இதன் தலைமையகம் சென்னையில்

மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது.

31.03.2022 அன்றுள்ளவாறு, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ. எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 1 |
| 2. | பணிமனைகள் | 22 |
| 3. | தொழிற்கூடங்கள் | 2 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 1 |
| 5. | பேருந்துகள் | 1,110 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 4,869 |

- இக்கழகம், 300 கிலோ மீட்டருக்கும் அதிகமான வழித்தடங்கள் உள்ள மாவட்டங்கள், வரலாற்று, மத மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு இடையே உள்ள மாநில போக்குவரத்து சேவைகள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற அண்டை மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசத்திற்கு இடையேயான போக்குவரத்து சேவைகளை வழங்கி வருகிறது.

- 31.03.2022 அன்றுள்ளவாறு, 22 பணிமனைகள் மூலம் 1,110 பேருந்துகளை இயக்குகின்றது.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களுடன் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களுக்கும் பேருந்துகளை இயக்கி வருகின்றது. அவற்றில் தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழித்தடங்களிலும் அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்குகின்றன. மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் அடிப்படையில், பேருந்து சேவைகள் மாநில சாலை போக்குவரத்து கழகங்களால் (SRTCs) பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.
- இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 4,869 ஆகும்.
- இக்கழகம் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து மற்றும்

கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்துகள் ஆகிய பேருந்து வகைகளை இயக்கி வருகின்றது.

- மாநகரப் போக்குவரத்துக் கழகத்தை தவிர மற்ற அனைத்து அரசு போக்குவரத்துக் கழக நீண்ட தூர பேருந்துகளை முன்பதிவு செய்வதற்காக இணையதள முன்பதிவு அமைப்பு (OTRS) எனப்படும் இணையதள பயணச்சீட்டு முன்பதிவு வசதியானது 2006–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இந்திய ரயில்வே மற்றும் விமான துறை போல மேம்படுத்தப்பட்டுள்ளது, பயணிகளின் வசதிக்காக பயணச்சீட்டுகளின் முன்பதிவு ஒரு மாதத்திற்கு முன்பே இணையதளம் மற்றும் கைபேசி செயலிகளின் மூலம் முன்பதிவு செய்ய வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.
- இணையதள முன்பதிவு வசதியானது (Online Ticket Reservation System) தமிழ்நாடு மற்றும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற அண்டை மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசத்தில் 60 இடங்களில் 64 முன்பதிவு மையங்களின் மூலமாக முன்பதிவு செய்யப்படுகின்றன.
- இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும்

பயணிகளின் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர் முனையிலிருந்து திரும்ப வருவதற்கான இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

- முன்பதிவு செய்யப்பட்ட பயணிகளுக்கு பேருந்து பதிவு எண், நடந்துநரின் பெயர் மற்றும் கைபேசி எண் குறுஞ்செய்தியாகப் பயணம் தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன் அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் இடம் முதலியவற்றை பயணிகள் நடத்துநரை தொடர்பு கொண்டும், நடத்துநர் பயணிகளுக்கு தகவல் அளிப்பதன் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
- இக்கழகம், பயணிகளின் புகார்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் கைபேசி எண்ணிற்கு புகார்கள் தெரிவிக்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது பயணிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கழிப்பறை வசதிகொண்ட "கிளாசிக்" பேருந்துகளை சென்னையிலிருந்து மாநிலத்தின் பல்வேறு இடங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.
- குறைந்த நிறுத்தங்கள் மற்றும் விரைவான சேவையினை நேரடியாக பயணிகளுக்கு

வழங்குவதற்காக முக்கிய இடங்களுக்கு குறிப்பிட்ட அடையாள பெயர்களுடன் (Brand Names) "பிரீமியம் சர்வீஸ்கள்" (Premimum Services) பேருந்துகள் இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, குறிப்பிட்ட இடங்களில் ஏறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வசதி கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

- தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைகளின் போது, பொதுமக்களின் பயணத்தை எளிதாக்கும் வகையில், சென்னை மாநகரப் பகுதிகளைச் சுற்றியுள்ள ஐந்து பேருந்து நிலையங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- சென்னை, மதுரை, நாகர்கோவில் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள முக்கிய பணிமனைகளில் நவீன பயிற்சி வசதிகளுடன் கூடிய பயிற்சி மையங்கள் அமைந்துள்ளன. ஓட்டுநர்கள் மற்றும் ஓட்டுநருடன் நடத்துநர்களுக்கு விபத்தில்லா ஓட்டுநர் பயிற்சி, எரிபொருள் திறன் மேம்பாட்டு பராமரிப்பு நடைமுறைகள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும்

மன அழுத்த மேலாண்மை போன்ற பயிற்சிகளை பல்வேறு தொழில்களைச் சேர்ந்த அனுபவமிக்க மற்றும் அறிவார்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் அளிக்கப்படுகிறது.

- தலைமை அலுவலகம், பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களை கண்காணிக்கவும் பயணிகள் போக்குவரத்தை கண்காணிக்கவும் மற்றும் பேருந்து தேவைகளை அறியவும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. பணிமனைகளில் கண்காணிப்பு கேமரா மற்றும் மின்னணு வருகைப் பதிவு முறைகளை படிப்படியாக அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.18 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.

இப்போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் நகரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. போக்குவரத்துச் சேவையை கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல

அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளுக்கு பேருந்து சேவைகளை அளித்து வருகின்றது.

31.03.2022 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ.எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 6 |
| 2. | பணிமனைகள் | 60 |
| 3. | தொழிற்கூடங்கள் | 3 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 6 |
| 5. | பேருந்துகள் | 3,299 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 20,754 |

- இக்கழகத்தின் 60 பணிமனைகள் மூலம் 3,299 பேருந்துகள் மூலம் 3,166 வரையறுக்கப்பட்ட சேவைகள் வழங்கி வருகிறது. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 20,754 ஆகும்.
- இக்கழகம், சாதாரண, விரைவு, சொகுசு, இடைநில்லா பேருந்து மற்றும் 3 x 2 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன

பேருந்துகளை இயக்கி வருகின்றது. அதிக எண்ணிக்கையிலான பயணிகளைக் கவரும் வகையில் 92 குளிர்சாதன பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- இக்கழகம் பொது மக்கள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக இயக்க பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பிரதி அமாவாசை(மேல்மலையனூர்), பௌர்ணமி (திருவண்ணாமலை), ஆடிக்கிருத்திகை (திருத்தணி), தைபூசம் (வடலூர்), கூவாகம், சித்திரை பௌர்ணமி, தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விஷேச நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

- மலைவாழ் மக்கள் மற்றும் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக கல்வராயன்மலை, சேராப்பட்டு மலை, வெள்ளிமலை, ஜமுனாமரத்தூர் மலை, புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, பாலமதி மற்றும் செங்காநத்தம் போன்ற மலை பகுதிகளுக்கு 29 மலை வழித்தட சேவைகளை வழங்கி வருகிறது.

- விழுப்புரம், காஞ்சிபுரம், புதுச்சேரி, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து இடங்களிலிருந்து சென்னைக்கு நேரடி பயணிகளின் வசதிக்காக 95 "இடைநில்லா பேருந்துகள்" இயக்கப்படுகின்றன.
- தலைமையகம், பணிமனை மற்றும் மண்டல அலுவலகங்களில் மின்னணு வருகை பதிவு அமைப்புகள் 8 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.
- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கட்டணமில்லா வருவாயினை ஈட்டுகிறது.
- இக்கழகத்திலுள்ள 6 மண்டலங்களிலும் ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் இரு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி சரகங்கள் இக்கழகத்தில் அமைந்துள்ளன.

**3.19 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.**

இப்போக்குவரத்துக் கழகம் சேலம் நகரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. சேலம் மற்றும்

தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகள் இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்கப் பகுதிகளாகும்.

31.03.2022 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ. எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 2 |
| 2. | பணிமனைகள் | 32 |
| 3. | தொழிற்கூடங்கள் | 2 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 4 |
| 5. | பேருந்துகள் | 2,059 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 12,109 |

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இது 2,059 பேருந்துகளை கொண்டுள்ளது மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,900 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 12,109 ஆகும்.

- இக்கழகம், ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்ராயன்மலை (வெள்ளிமலை) நல்லமதிமலை (பச்சமலை) மற்றும் தொட்டமாஞ்சி ஆகிய மலைப் பகுதிகளுக்கு 25 சேவைகளை பழங்குடி மக்கள் மற்றும் பள்ளி செல்லும் பழங்குடி மாணவர்கள் தொடர்ந்து பயன்பெறும் வகையில் இயக்கி வருகின்றது.

இக்கழகம் சுற்றுலா மற்றும் பக்தர்களின் நலனுக்காக கீழ்க்கண்ட பேருந்துகளை இயக்குகின்றன:–

- வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.
- பண்டிகை மற்றும் முக்கிய நாட்களில் மலை மாதேஸ்வரன் கோயில்கள், சிவன்கோயில்கள் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் அரகளூர் பகுதிகளுக்கும், முருகன் கோயில் அமைந்துள்ள காளிபட்டி மற்றும் கபிலர்மலை பகுதிகளுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

**3.20 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.**

இக்கழகம், கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் கீழ் இயங்கி வருகின்றது. இக்கழகம், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு பேருந்து சேவையினை அளித்து வருவதுடன்,கேரளா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்கும் பேருந்து சேவையினை அளித்து வருகிறது.

31.03.2022 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ. எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 4 |
| 2. | பணிமனைகள் | 44 |
| 3. | தொழிற்கூடங்கள் | 2 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 2 |
| 5. | பேருந்துகள் | 2,866 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 16,704 |

- இக்கழகத்தின் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை 44 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 2,866 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,747 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 16,704 ஆகும்.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

- இக்கழகம் பொள்ளாச்சியில் பேருந்து பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்காக ஒரு பயிற்சி நிறுவனத்தை நடத்தி வருகிறது. புதியதாக பணியமர்த்தப்படும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பணியிலுள்ள ஓட்டுநர்களின் திறமையினை மேம்படுத்திடவும் ஒரு ஓட்டுதல் ஒத்த கருவி (Simulator) பொள்ளாச்சியில் உள்ள பயிற்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பு நிதியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட மற்றுமொரு ஓட்டுதல் ஒத்த கருவி (Simulator) ஓட்டுநர்களின் திறமையை மேம்படுத்திட, ஈரோடு மாவட்டம் பவானிசாகரிலுள்ள பயிற்சி நிறுவனத்தில்

நிறுவப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பிற செயல்பாடுகள்:–

- இக்கழகம் வால்பாறை, உதகமண்டலம் மற்றும் கூடலூரில் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்து வருகின்றது.
- பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை பராமரித்து வருகின்றது.

## 3.21 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

- இக்கழக இயக்க எல்லை புவியியல் ரீதியாக மாநிலத்தில் உள்ள 11 மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.
- இக்கழகம், கும்பகோணத்தை தலைமை இடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது. கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய ஆறு மண்டல அலுவலகங்கள் பொது மேலாளரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

31.03.2022 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ.எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 6 |
| 2. | பணிமனைகள் | 60 |
| 3. | தொழிற்கூடங்கள் | 4 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 7 |
| 5. | பேருந்துகள் | 3,441 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 20,613 |

- இக்கழகத்தில் 60 பணிமனைகள், 3,441 பேருந்துகள் மற்றும் 3,335 வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 20,613 ஆகும்.
- இக்கழகம், சாதாரண, விரைவு, அதிசொகுசு மற்றும் 3 x 2 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருச்சிராப்பள்ளி மற்றும் கரூரில், 3 x 2 இருக்கைகள் கொண்ட புதிய வகை குளிர்சாதன பேருந்துகள் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அதிக பயணிகளை ஈர்க்கும் வகையில் ஆறு மண்டலங்களிலும் 52 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லை 11 வருவாய் மாவட்டங்களும் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகியவையாகும். இக்கழகத்தின் இயக்க எல்லைக்குட்பட்ட உலக புகழ் பெற்ற

வேளாங்கன்னி ஆலயம், உலக புராதன சின்னமான தஞ்சை பெருவுடையார் கோயில், திருவரங்கம் கோயில், நவக்கிரக கோயில்கள் மற்றும் சமயபுரம் கோயில் ஆகிய வழிபாட்டுத்தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருவிழா காலங்களில் வழிபாட்டுத்தலங்களான பழநி, தாயமங்கலம், நாகூர் மற்றும் ஏர்வாடி தர்கா போன்ற இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.
- இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவுகள் உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவுகளுடன் பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளது.
- கும்பகோணத்திலுள்ள தலைமை அலுவலக கட்டடத்தின் மேற்கூரையில் 10 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய மின்னாற்றல் தகடு

அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20 சதவீத அளவிற்கு மின் கட்டணம் குறைந்துள்ளது.

- திருச்சி மண்டல அலுவலகம் மற்றும் ராமநாதபுரம் புறநகர் பணிமனைகளில் பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்வதற்கான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.22 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

இக்கழகம், மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் மதுரை மாநகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவைகளை கண்காணிக்க மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

31.03.2022 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ. எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 3 |
| 2. | பணிமனைகள் | 40 |
| 3. | தொழிற்கூடங்கள் | 3 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 3 |
| 5. | பேருந்துகள் | 2,302 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 14,232 |

- இக்கழகம் 2,302 பேருந்துகளை கொண்ட 40 பணிமனைகளைக் கொண்டுள்ளது. இக்கழகம் 2,166 வரையறுக்கப்பட்ட சேவைகளை இயக்குகிறது.

- இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 14,232 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. பெண்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளியின் உதவியாளருக்கு இலவசமாக பயணம் செய்ய 890 சாதாரண நகரப் பேருந்துகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

- பல்வேறு மாநிலங்கள் மற்றும் நாடுகளிலிருந்து மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- மதுரை சுற்றுலா பயணிகளை ஈர்க்கக்கூடிய பல்வேறு சுற்றுலா தலங்களை கொண்ட ஒரு பண்டைய நகரமாகும்.

மதுரையிலிருந்து 10 கீ.மீ தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், சுமார் 23 கி.மீ தொலைவில் உள்ள கள்ளழகர் திருக்கோயிலுக்கும் பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் சுற்றுலா பேருந்துகளை இக்கழகம் இயக்கி வருகின்றது.

- வீரபாண்டி, இருக்கன்குடி, வேளாங்கன்னி, பழநி, சபரிமலை ஐயப்பன் திருக்கோயில், அழகர்கோயில், திருச்செந்தூர் கோயில், மாசாணியம்மண் கோயில், திருவண்ணாமலை கோயில் மற்றும் திருப்பரங்குன்றம் கோயில் ஆகிய இடங்களுக்கு திருவிழாக்காலங்களில் இக்கழத்தினால் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- இப்போக்குவரத்துக் கழகத்தால் 30 இரவு நகரப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- மதுரை நகரில் இயக்கப்படும் 75 பேருந்துகளில் பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்கேற்ப நகர மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.
- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.
- மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மண்டலங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த கருவி (Simulator) மூலம் 186 ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் 7 பணிமனை / அலுவலக கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின்னாற்றல் தகடு நிறுவி மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மண்டல அலுவலகத்தில் மின்னாற்றல் தகடு நிறுவும் பணி துவங்கியுள்ளது.

### 3.23 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

இக்கழகம், மேலாண் இயக்குநர் தலைமையின் கீழ், திருநெல்வேலி நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இக்கழகம், தனது

போக்குவரத்து சேவையை திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வழங்கி வருகிறது. மேலும், தனது பேருந்து சேவையை கண்காணித்து மேம்படுத்த திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

31.03.2022 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை கீழ்வருமாறு:–

| வ. எண். | விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மண்டலங்கள் | 3 |
| 2. | பணிமனைகள் | 30 |
| 3. | தொழிற்கூடங்கள் | 2 |
| 4. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | 2 |
| 5. | பேருந்துகள் | 1,773 |
| 6. | பணியாளர்கள் எண்ணிக்கை | 10,587 |

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின்

மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,773 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 10,587 ஆகும்.

- இக்கழகம், சாதாரண, விரைவு, அதி சொகுசு, மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன்கோயில், திருவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.
- இக்கழகத்தால் இரவு பேருந்து சேவைகள் திருநெல்வேலி நகரிலும் மற்றும் நாகர்கோவில் நகரிலும் இயக்கப்பட்டு வருகின்றது.
- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலத்தின் 29 வழித்தடங்களில் 60 கூடுதல் நடைகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.
- 100 பேருந்துகளில் பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.
- ஓட்டுநர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் பொருட்டு ஓட்டுநர் பயிற்சி மையம் கன்னியாகுமரியிலுள்ள ராணித்தோட்டத்தில் கட்டப்பட்டுள்ளது.

## 4. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

### 4.1 முன்னுரை

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மாநிலம் முழுவதும் உள்ள அரசுத்துறை ஊர்திகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இத்துறையில் சென்னை, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், ஊட்டி, வேலூர், ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல், கடலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய 20 இடங்களில் அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன.

சென்னையில் உள்ள அரசு மத்திய தானியங்கிப் பணிமனை பொது மேலாளர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இத்துறையில் திருச்சி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன.

இத்துறையில், 10 எரிபொருள் வழங்கு நிலையங்கள் சென்னை (தலைமைச் செயலகம் மற்றும் நந்தனம்), சேலம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர், தருமபுரி மற்றும்

நாகர்கோவில் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

### 4.2 நோக்கம்

மாநிலம் முழுவதும் உள்ள வேளாண் துறை, காவல் துறை, வருவாய் துறை, கல்வித் துறை, நீதித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வனத் துறை, அறநிலையத் துறை போன்ற சுமார் 100 அரசுத் துறைகளில் (சுகாதாரம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றை தவிர்த்து) இயங்கி வருகின்ற 21,201 ஊர்திகளை செம்மையான முறையில் பராமரிப்பதே இத்துறையின் தலையாய நோக்கமாகும்.

அரசுத் துறை ஊர்திகளுக்கு தரமான அசல் உதிரிப் பாகங்களை பொருத்துவதன் மூலமும், எவ்வித பிரச்சினையுமின்றி சிக்கனமான சேவை வழங்குவதன் மூலமும் தரமான பராமரிப்புப் பணிகளை வழங்குவதை உறுதி செய்கிறது.

### 4.3 அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் இயங்கும் இதர அரசு தானியங்கி பணிமனைகள்

சென்னையில் உள்ள அரசு மத்திய தானியங்கிப் பணிமனை பொது மேலாளர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இப்பணிமனையின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் பாதுகாப்பு வாகனங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் வாகனங்கள், மிக மிக முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள், அரசுத் துறை செயலாளர்களின் வாகனங்கள், இதர துறை அலுவலர்களின் வாகனங்கள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகாமையில் இயங்குகின்ற தலைமைச் செயலக பராமரிப்பு பணிமனையில் முக்கிய பிரமுகர்களின் வாகனங்களின் சிறு மற்றும் குறு பழுதுகள் செப்பனிடப்படுவதோடு அரசு செயலாளர்களின் ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 20 அரசு தானியங்கி பணிமனைகள் மூலம் அந்தந்த மாவட்டங்களில் இயங்கும் அரசுத் துறை ஊர்திகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இத்துறையின் இயக்குநரகம் மற்றும் 20 அரசு தானியங்கி பணிமனைகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக கணினிமயமாக்கப்படும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.4 இதர பணிகள்

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையானது அரசாணை எண்.2275 உள் (போக்குவரத்து–இ) துறை, நாள் 10.10.1990–இல் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மாநில அரசுத் துறை ஊர்திகளை கழிவு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி பொதுத்துறை நிறுவனங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊர்திகளை கழிவு செய்வதற்கு கழிவுச் சான்று வழங்கும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது.

நீதிமன்ற ஆணையின்படி பறிமுதல் செய்யப்பட்ட ஊர்திகளை விற்பனை செய்து அகற்றும் பணியினையும் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, வனத்துறை, காவல்துறை (102 Crpc) வருவாய்துறை, உணவு பொருட்கள் வழங்கல் துறை ஆகிய துறைகள் மூலம் பறிமுதல் செய்யப்படுகின்ற ஊர்திகளை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாணைகளின்படி, விற்பனை செய்யும் பணியினையும் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

அரசு தானியங்கி பணிமனைகள் மதுரை, திருச்சி, சேலம் ஆகியவற்றில் செயல்பட்டு வரும் "ஓட்டுநர் பயிற்சி மையங்கள்" மூலமாக பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றுகின்ற ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களின் திறன் மேம்படுத்தும் பணியினை தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

அரசு தானியங்கி பணிமனைகள் திருச்சி மற்றும் தஞ்சாவூரில் மாதிரி அடிப்படையில் இயங்கி வருகின்ற "நடமாடும் பணிமனைகள்" மூலமாக மேற்படி மாவட்டங்களுக்கு அருகில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் இல்லாத புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கு சென்று அங்குள்ள அரசுத் துறை ஊர்திகளை பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

**4.5 இத்துறையின் தொலைநோக்கு திட்டம்**

நவீனரக ஊர்திகளில் உள்ள புதிய வகை தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விவரங்கள் குறித்தும் சமீபத்திய சவால்களை எதிர்நோக்கும் விதத்தில் இத்துறையின் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு உரிய கூடுதல் பயிற்சி அளித்தல்.

இத்துறையின் அனைத்து அரசு தானியங்கி பணிமனைகளையும் போதுமான அடிப்படை வசதிகளுடன் தேவையான நவீனரக கருவிகள் மற்றும் உபகரணங்களை கொண்டு நவீனப்படுத்தப்படும்.

அரசு தானியங்கி பணிமனைகள் இல்லாத மாவட்டங்களுக்கு நடமாடும் பணிமனைகள் அமைத்து தருதல்.

## 4.6 துறையின் செயல்பாடு

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மூலமாக 2021–2022 (01.04.2021 முதல் 31.03.2022 வரை) நிதியாண்டில் பழுதுகள் மேற்கொள்ளப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 26, 542.

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மூலமாக 2021–2022 (01.04.2021 முதல் 31.03.2022 வரை) நிதியாண்டில் கழிவு செய்யப்பட்ட பல்வேறு வகையான ஊர்திகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு:–

| ஆண்டு | கனரக மோட்டார் வாகனங்கள் | கார் | ஈப்பு | வேன் | மோட்டார் சைக்கிள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2021–2022 (01.04.2021 முதல் 31.03.2022 வரை) | 109 | 133 | 367 | 72 | 675 | 1356 |

## 5. சாலை போக்குவரத்து நிறுவனம்

### 5.1 அறிமுகம்

சாலை போக்குவரத்து நிறுவனம் 1860–ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1976–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. சாலை போக்குவரத்து நிறுவனம், பேருந்து போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலைப் பாதுகாப்பு ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் புத்தாக்க பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல் பணியையும் செய்து வருகின்றது.

### 5.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிப்பூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கீழ்கண்ட 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது:–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 6. | மதுரை | 11. | பொள்ளாச்சி |
| 2. | வேலூர் | 7. | திண்டுக்கல் | 12. | ஈரோடு |
| 3. | விழுப்புரம் | 8. | திருநெல்வேலி | 13. | கும்பகோணம் |
| 4. | சேலம் | 9. | நாகர்கோவில் | 14. | காரைக்குடி |
| 5. | தருமபுரி | 10. | விருதுநகர் | 15. | புதுக்கோட்டை |

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட திட்டத்தின் நிதியுதவி மூலம் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி நடத்தப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக அரசின் வழிகாட்டுதலின்படி வழங்கப்படும் பயிற்சிகள் இவ்வோட்டுநர் பயிற்சி பள்ளிகளில் மாற்றப்பட்ட அட்டவணையின்படி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புத்தாக்க பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2020–2021 வரை | 2021–2022 | மொத்தம் |
| 1. | கும்மிடிப்பூண்டி | 24,273 | 292 | 24,565 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 2,567 | 33 | 2,600 |
| 3. | இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கனரக வாகன பயிற்சி மையங்கள் | 36,553 | 227 | 36,780 |
| **மொத்தம்** | | **63,393** | **552** | **63,945** |

| | | | |
|---|---|---|---|
| புத்தாக்க பயிற்சிகள் கும்மிடிப்பூண்டியில் | 65,462 | 1,345 | 66,807 |

## 5.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

1997–ஆம் ஆண்டு இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் இலகுரக வாகன பயிற்சியளிப்பதற்கு சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டது. பொது மக்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி மட்டுமல்லாமல் நிதியுதவி திட்டங்களின் மூலம் சென்னை பெருநகர மாநகராட்சி போன்ற பிற துறைகளின் ஓட்டுநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2020–2021 வரை | 2021–2022 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 2990 | 165 | 3,155 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1,099 | 11 | 1,110 |
| மொத்தம் | | 4,089 | 176 | 4,265 |

மேலும் அரசாணைப்படி, அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விபரம் வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2020–2021 வரை | 2021–2022 | மொத்தம் |
| 1. | தரமணி, | 7,089 | 217 | 7,306 |
| 2. | கும்மிடிப்பூண்டி | 3,608 | 59 | 3,667 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 25,599 | 80 | 25,679 |
| **மொத்தம்** | | **36,296** | **356** | **36,652** |

## 5.4 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அப்பயிற்சி, தரமணியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. மார்ச் 2022 வரை, 1,973 பயிற்சிகளின் மூலம் மொத்தம் 41,764 போக்குவரத்துக் கழக பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும், போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

## 5.5 சாலை போக்குவரத்து இதழ்

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை 526 ஆராய்ச்சி அறிக்கைகள், 30 ஆலோசனை அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு பயன்படும் வகையில் விபத்து விசாரணை கையேடு என்ற வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது.

சாலை போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு, விபத்து ஒப்பீடு குறித்த தகவல்கள் அடங்கிய சாலைப் போக்குவரத்து இதழினை சாலைப் போக்குவரத்து நிறுவனம் வெளியிடுகிறது.

## 5.6 கொள்முதல் நடவடிக்கைகள்

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (Lubricants) ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

## 5.7 உபகரணங்கள் பரிசோதனை மற்றும் தரக் கண்காணிப்பு

சாலை போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 வகையான மோட்டார் வாகன உதிரி பாகங்கள் ASRTU மற்றும் BIS விவரக் குறியீடுகளின்படி, பரிசோதனை செய்யும் வசதி உள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் 31.03.2022 அன்றுள்ளவாறு 5,926 மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

## 5.8 கல்வி நிறுவனங்கள்

சாலை போக்குவரத்து நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இடஒதுக்கீட்டு அடிப்படையில் கீழ்கண்ட கல்வி நிறுவனங்களை தொடங்கியுள்ளது.

| வ. எண் | விவரம் | மொத்த இடங்கள் | நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள் |
| 1. | இளங்கலை பொறியியல் பட்டப் படிப்பு | 420 | 273 (65%) | 147 (35%) |
| 2. | பல்தொழில்நுட்ப கல்லூரிகள் – பொறியியல் பட்டயம் | 700 | 350 (50%) | 350 (50%) |

| வ. எண் | விவரம் | மொத்த இடங்கள் | நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | | நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள் |
| 3. | அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி (முன்னாள் பெருந்துறை மருத்துவக் கல்லூரி | 100 | 15 (15%) (அகில இந்திய ஒதுக்கீடு) | 55 (65%) (அரசு) (அகில இந்திய ஒதுக்கீடு நீங்கலாக) | 30 (35%) (அகில இந்திய ஒதுக்கீடு நீங்கலாக) |

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (PMCH) 2019–ஆம் ஆண்டு முதல் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுகிறது.

2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல் கல்லூரியை அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றி, அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் உயர்கல்வி துறையால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.165, (உயர்கல்வித் (ஜே2) துறை), நாள். 27.08.2021).

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று தொழில்நுட்ப பயிலக கல்லூரிகள் குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தற்போது,

தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 700 மாணவர்கள் பட்டய பொறியாளர் படிப்பில் நான்கு பிரிவுகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இக்கல்லூரிகள் இதுவரை 1,721 மருத்துவர்களையும், 10,452 பொறியியல் பட்டதாரிகளையும், 12,087 பட்டய பொறியாளர்களையும் உருவாக்கியுள்ளன.

## 6. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனமானது தமிழக அரசிற்கு சொந்தமான வங்கியல்லாத நிதி நிறுவனமாக 25.03.1975 அன்று துவங்கப்பட்டு, தமிழகத்திலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதி உதவியை பூர்த்தி செய்ய பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன் மூலம் பூர்த்தி செய்து அரசின் நிதி ஒதுக்கீட்டை சார்ந்திருக்காமல் இருக்கும் பொருட்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 6.1 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975–ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த எட்டு ஆண்டுகளில் ஈட்டிய இலாபம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளுபடிக்கு முந்தைய இலாபம் | அ.போ. கழகங்களுக்கு வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் இலாபம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய இலாபம் |
|---|---|---|---|---|---|
| 2014–15 | 3294.25 | 2509.00 | 785.25 | 254.77 | 530.48 |
| 2015–16 | 5283.29 | 4648.68 | 634.61 | 211.25 | 423.36 |
| 2016–17 | 7322.42 | 6469.00 | 853.42 | 282.17 | 571.25 |
| 2017–18 | 7996.71 | 6964.50 | 1032.21 | 357.23 | 674.98 |
| 2018–19 | 9885.93 | 8684.16 | 1201.77 | 419.95 | 781.82 |
| 2019–20 | 1874.64 | – | 1874.64 | 656.24 | 1220.74 |
| 2020–21 | 6145.75 | – | 6145.75 | 1236.72 | 4909.03 |
| 2021–22 (முன் தணிக்கை) | 7309.98 | – | 7309.98 | 2174.19 | 5135.79 |

## 6.2 வைப்பீடுகள்

இந்நிறுவனம், பொது மக்களின் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. 31.03.2022 அன்றுள்ளவாறு,

இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத் தொகை ரூபாய் 8,011.75 கோடியாகும்.

## 6.3 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்

- வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்துக் கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப வழங்கப்படுகின்றது
- வட்டி வீதங்கள், பிற அரசு நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் வட்டி வீதங்களுக்குகேற்ப நிர்ணயிக்கப்படுகிறது. தற்போதைய வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் பின்வருமாறு:–

| காலம் | வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி காலாண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 18.01.2021 முதல் | |
|---|---|---|
| | பொதுமக்கள் | மூத்த குடிமக்கள் |
| 12 மாதங்கள் | 7.00% | 7.25% |
| 24 மாதங்கள் | 7.25% | 7.50% |
| 36–லிருந்து 48 மாதங்கள் | 7.75% | 8.25% |
| 60 மாதங்கள் | 8.00% | 8.50% |

## 6.4 வைப்பீட்டுத் திட்டங்கள்

தற்போது கீழ்க்கண்ட இரு வைப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

| விவரம் | திட்டம் 1 | திட்டம் 2 |
|---|---|---|
| | குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம் | பணப்பெருக்குத் திட்டம் |
| குறைந்தபட்ச வைப்பீடு | ரூபாய் 50,000/– | ரூபாய் 50,000/– |
| காலம் (மாதங்களில்) | 24,36,48 மற்றும் 60 | 12, 24, 36, 48 மற்றும் 60 |
| வழங்கும் வட்டி வீதம் | 24 மாதங்கள் – காலாண்டு 36 – 60 மாதங்கள் – மாதந்தோறும், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி | முதிர்வுறும்போது (கூட்டு வட்டி காலாண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) |

## 6.5 பெண் குழந்தை பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்

இத்திட்டம் தமிழக அரசின் சமூக நலத்துறையின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது. 31.03.2022 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் 78,975 வைப்பீடுதாரர்களின் மூலம் பெறப்பட்ட வைப்பீடு ரூ.11.96 கோடியாகும்.

## 6.6 நிறுவனத்தின் நிதி நிலை

31.03.2022 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:

**(ரூபாய் கோடியில்)**

| வகைக | தொகை | தொகை |
|---|---|---|
| பங்கு மூலதனம் –<br>அ) அரசு பங்குத்தொகை<br>ஆ) அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்குத் தொகை | <br>2032.10<br>18.71 | 2050.81 |
| இருப்புகள் மற்றும் உபரி | | 156.20 |
| வைப்பீடுகள் | | 8011.75 |
| பாரத ஸ்டேட் வங்கி மற்றும் பரோடா வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | | 3,855.00 |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட குறுகிய காலக் கடன்கள் | | 600.00 |
| மொத்தம் | | **14,673.76** |

## 6.7 கடன்கள்

2021–2022–ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| வகைகள் | தொகை |
|---|---|
| தவணைக் கொள்முதல் கடன்கள் | – |
| வங்கியிடமிருந்து பெறப்பட்ட குறுகியகால கடன் | 2,955.00 |
| நடைமுறை மூலதனத்திற்காக பருவக் கடன்கள் | 7,831.33 |
| மொத்தம் | **10,786.33** |

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கடந்த எட்டு ஆண்டுகளில் அளித்த நிதியுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிதியுதவிகள் |
|---|---|
| 2014–2015 | 2,151.24 |
| 2015–2016 | 2,776.33 |
| 2016–2017 | 3,574.32 |
| 2017–2018 | 3,757.58 |
| 2018–2019 | 3,445.75 |
| 2019–2020 | 6,190.11 |
| 2020–2021 | 7,725.25 |
| 2021–2022 | 10,786.33 |

## 6.8 நிலுவையிலுள்ள கடன்கள் (31.03.2022 அன்றுள்ளவாறு)

(ரூபாய் கோடியில்)

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நிலுவையிலுள்ள மூலதனம் | | | |
|---|---|---|---|---|
| | தவணைக் கொள்முதல் கடன்கள் | குறுகிய காலக் கடன்கள் | நீண்ட காலக் கடன்கள் | மொத்தம் |
| அ.போ.க (கோயம்புத்தூர்) லிட்., | 109.15 | 473.00 | 1938.89 | 2521.04 |
| அ.போ.க (கும்பகோணம்) லிட்., | 135.30 | 428.00 | 1152.64 | 1715.94 |
| அ.போ.க (மதுரை) லிட்., | 43.82 | 367.00 | 1167.99 | 1578.81 |
| மா.போ.க (சென்னை), லிட்., | 160.90 | 545.00 | 1011.00 | 1716.90 |
| அ.வி.போ.க தமிழ்நாடு, லிட்., | 181.03 | 148.00 | 1179.18 | 1508.21 |
| அ.போ.க (சேலம்) லிட்., | 108.56 | 269.00 | 1081.85 | 1459.41 |
| அ.போ.க (திருநெல்வேலி) லிட்., | 50.65 | 295.00 | 1792.81 | 2138.46 |
| அ.போ.க (விழுப்புரம்) லிட்., | 136.47 | 430.00 | 851.90 | 1418.37 |
| **மொத்தம்** | **925.88** | **2955.00** | **10176.26** | **14057.14** |

## 6.9 புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம்

இந்நிறுவனம் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் வைப்பீடு வட்டி வீதத்திற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| விவரங்கள் | வட்டி வீதம் | நாளன்றுள்ளவாறு |
|---|---|---|
| தவணைக் கொள்முதல் கடன்கள் | 6,90% | 01.04.2021 |
| நீண்ட காலக் கடன்கள் | 7.00% | 01.04.2021 |
| ரூ.1,500 கோடி குறுகிய காலக்கடன் (பாரத ஸ்டேட் வங்கி) | 6,25% | 28.09.2021 |
| ரூ.1,455 கோடி குறுகிய காலக்கடன் (பாரத ஸ்டேட் வங்கி) | 4.75% | 18.02.2022 |
| ரூ.639 கோடி குறுகிய காலக்கடன் (பரோடா வங்கி) | 6.25% | 26.03.2021 |

## 6.10 போக்குவரத்துக் கழகங்களின் மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்

- வங்கிகளுடனான தற்போதுள்ள மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வட்டி வீதத்தை குறைத்தல்படி, இந்நிறுவனம் அரசு ஆணை (நிலை) எண்.113, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள் 04.07.2019 மூலம் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.900/– கோடி ரொக்கக் கடன் வாங்கி அதை போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. இதனால், போக்குவரத்துக் கழகங்கள் ஆண்டுக்கு ரூ.65 கோடி வரை வட்டி இலாபம் பெற முடிகிறது.
- கொரோனா பெருந்தொற்று பொது முடக்கத்தின் காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் போதிய வருமானத்தை ஈட்ட இயலாததால்

2021-2022-ஆம் ஆண்டில், தமிழக அரசின் உத்தரவாதத்தின் அடிப்படையில் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.2,955 கோடி கடன் பெற்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கியுள்ளது. இருந்தபோதிலும், 2020-2021-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டில் கூடுதலாக வங்கிகளில் இருந்து கடன் வாங்கவில்லை. பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூ. 3,100 கோடி கடனை 2021-2022-ஆம் ஆண்டு முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

## 7. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவானது, 1984–ஆம் ஆண்டு தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. சாலைப் போக்குவரத்துத் தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய அடிப்படை நோக்கமாகும்.

இந்நிறுவனம் தகவல் தொழில்நுட்பம், ஆவணங்களை கணினி மயமாக்குதல், போக்குவரத்துப் பணி, அறிவார்ந்த போக்குவரத்து முறைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தனது ஆலோசனை சேவைகளை அளித்து வருகிறது. இதுவரை இந்நிறுவனம் போக்குவரத்துத் துறை, போக்குவரத்து திட்டமிடல், கணினி மயமாக்குதல் மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து முறைகள் ஆகிய களங்களில் 67 ஆலோசனை திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. பின்வரும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது 1. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்காக, சென்னை பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பு (BRTS)–க்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்தல், 2. நிகழ்நிலை இணையதள முன்பதிவு வசதியை கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல்.

## 8. துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

போக்குவரத்துத் துறையின் முக்கியப் பணி தமிழகத்தில் பொதுமக்களின் பயணத்திற்காக கட்டண நிலை பேருந்துகளை (Stage Carriage) இயக்குவது. கூடுதலாக இத்துறை தென்னக இரயில்வே, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புத் துறை ஆகிய மத்திய அரசுத் துறைகளுடன் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுத் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புத் துறையாக செயலாற்றுகிறது. மேற்கண்ட துறைகளிடமிருந்து பெறப்படுகின்ற நிலத்தேவை தொடர்பான கருத்துருக்களின் மீது மாவட்ட ஆட்சித் தலைவர் / நில நிருவாக ஆணையரின் பரிந்துரையின் பெயரில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, உரிய துறைகளிடம் அவைகளின் திட்டங்களை தொடங்குவதற்கு ஒப்படைக்கப்படுகின்றன.

இத்துறை சென்னையிலுள்ள பல்வேறு பெருந்திரள் போக்குவரத்து நிறுவனங்களான சென்னை மெட்ரோ இரயில், இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் நகர்புற அமைப்புகளான பெருநகர சென்னை மாநகராட்சி, பிற நகர்புற உள்ளாட்சி அமைப்புகள், சென்னை போக்குவரத்து காவல் மற்றும் இதர பகுதி போக்குவரத்து காவல், சென்னை

பெருநகர் வளர்ச்சி குழுமம், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையம் (CUMTA) முதலியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

**8.1 ரயில்வே திட்டங்கள்**

தமிழகத்தில், நில நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் புதிய ரயில் பாதைகள், இரட்டை ரயில் பாதைகள் மற்றும் அகல இரயில் பாதைகள் அமைப்பதற்கு நிலங்களை கையகம் செய்து இரயில்வே துறைக்கு வழங்குவதற்கு போக்குவரத்துத் துறை முகமை துறையாக செயல்படுகிறது.

**8.2 இரட்டை இரயில் பாதை திட்டங்கள்**

**i) விழுப்புரம் – திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டம்.**

இத்திட்டம், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களை இணைத்து அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டத்திற்காக விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள 141.00.97 ஹெக்டேர் பட்டா நிலம், 40.92.61 ஹெக்டேர் புறம்போக்கு நிலம், நில கையகம் செய்ய நிருவாக

அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 44.82.42 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 96.18.55 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. புறம்போக்கு நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**ii) ஓமலூர் – மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம்**

இந்த திட்டம் ஒமலூர் முதல் மேட்டுர் அனை வரை 29.03 கி.மீ தூரத்திற்கு இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள 15 கிராமங்களில், 24.75 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 4.45 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. 24.75 ஹெக்டேர் பட்டா நிலங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

**iii) மதுரை – தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதை திட்டம்**

இத்திட்டம் மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். மதுரை மற்றும் தூத்துக்குடி இடையிலான அகல இரயில் பாதை அமைப்பதற்கு 95.70.17 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 21.23.30 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**iv) கன்னியாகுமரி – திருவணந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்**

இத்திட்டமானது கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில், நாகர்கோவிலிலிருந்து இரணியல் மற்றும் இரணியலில் இருந்து பாரசாலா வரையிலான மூன்று அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு அலகுகளான கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் மற்றும் நாகர்கோவிலிலிருந்து இரணியல் வரையிலான இரட்டை அகல இரயில் பாதை திட்டத்திற்கு 14.03.73 ஹெக்டேர் பட்டா நிலம்

மற்றும் 0.96.54 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்வதற்கு நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 0.91.79 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 13.11.94 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இரணியிலில் இருந்து பாரசாலா வரையிலான வழித்தடத்திற்குத் தேவையான நிலம் எடுப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**v) மணியாச்சி – நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்**

இத்திட்டம், மணியாச்சி முதல் நாகர்கோவில் வரை 102 கி.மீ தூரத்திற்கு இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 68.39.23 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 15.99.78 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3.13.33 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 65.25.90 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்துவதற்கான

பணிகள் நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**vi) சேலம் மேக்னசைட் – ஓமலூர் சந்திப்பு இரட்டை அகல இரயில்பாதை திட்டம்**

இத்திட்டம், சேலம் மேக்னசைட் முதல் ஓமலூர் சந்திப்பு வரை 11 கி.மீ தூரத்திற்கு இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக, சேலம் மாவட்டத்தில் 0.69.01 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 0.02.06 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 8.3 புதிய அகல இரயில் பாதை திட்டம்

**i) மீளவிட்டான் – மேலமருதூர் (மதுரை – தூத்துக்குடி வழி அருப்புக்கோட்டை) புதிய இரயில் பாதை திட்டம்.**

இத்திட்டம், மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை அருப்புக்கோட்டை வழியாக மீளவிட்டான் முதல் மேலமருதூர் வரையிலான 18 கி.மீ தூரத்திற்கு புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக, தூத்துக்குடி மாவட்டத்தில் 71.05 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 4.24 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**ii) சின்னசேலம் – கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம்**

இத்திட்டம், சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை 16 கி.மீ தூரத்திற்கு புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 44.66 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 3.04 ஹெக்டேர் நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**iii) திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை திட்டம்**

திண்டிவனம் முதல் நகரி வரை 184.45 கி.மீ தூரத்திற்கு இணைக்கும் புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். திண்டிவனம் (தமிழ்நாடு) – நகரி (ஆந்திர பிரதேசம்) இடையே, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மாவட்டங்களை கடந்து செல்லும் வகையில் இரயில் பாதை அமையவுள்ளது. மேற்காணும் மாவட்டங்களில் உள்ள 539.65.63 ஹெக்டேர் பட்டா நிலம் மற்றும் 123.67.59 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்த நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**iv) சென்னை கடற்கரை – கொருக்குப்பேட்டை இடையே 3–வது மற்றும் 4–வது புதிய இரயில் பாதை திட்டம்**

சென்னை கடற்கரை முதல் கொருக்குப்பேட்டை வரை 3–வது மற்றும் 4–வது புதிய இரயில் பாதையானது சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இது சென்னை கடற்கரை மற்றும் கும்மிடிப்பூண்டி இடையிலான புறநகர் இரயில் பயணிகளின் சேவைக்காக உருவாக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மாவட்டங்களில் 506 சதுர மீட்டர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**v) கொருக்குப்பேட்டை – எண்ணூர் இடையே 4–வது புதிய இரயில் பாதை திட்டம்**

கொருக்குப்பேட்டை முதல் எண்ணூர் வரை 4–வது புதிய இரயில் பாதை அமைப்பதற்காக, சென்னை மாவட்டத்தில் 12516 சதுர மீட்டர் நிலத்தை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**vi) கொருக்குப்பேட்டை – எண்ணூர் இடையே 3–வது மற்றும் 4–வது புதிய இரயில் பாதை திட்டம்**

இத்திட்டத்திற்காக, 2429 சதுர மீட்டர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**vii) மதுரை – தூத்துக்குடி வழி அருப்புக்கோட்டை புதிய இரயில்பாதை திட்டம்**

இத்திட்டம் மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை அருப்புக்கோட்டை வழியாக 143.5 கி.மீ தூரத்திற்கு புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இதற்கான நிருவாக அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**viii) பேரளம் – காரைக்கால் புதிய இரயில் பாதை திட்டம்**

இத்திட்டம் பேரளம் முதல் காரைக்கால் வரை 23.5 கி.மீ தூரத்திற்கு புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக, 2.03 ஹெக்டேர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**ix) நாகப்பட்டினம் – திருத்துறைப்பூண்டி புதிய இரயில் பாதை திட்டம்**

இத்திட்டம் நாகப்பட்டினம் முதல் திருத்துறைப்பூண்டி வரை 43 கி.மீ தூரத்திற்கு புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக, 01.87.73 ஹெக்டேர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**8.4.** போக்குவரத்துத் துறை, விமான துறை மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்களான இந்திய விமான நிலைய ஆணையத்துடன் இணைந்து செயல்பட்டு வந்தது. சமீபத்தில், இப்பொருள் தமிழ்நாடு அரசு அலுவல் விதிகளின்படி (Business Rules) தொழில் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

## 9. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

### 9.1 சாலைப் பாதுகாப்பு

நாட்டில் அதிக எண்ணிக்கையிலான மோட்டார் வாகனங்களைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 31.03.2022 அன்றுள்ளவாறு, 3.24 கோடி மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் கூடுதலாக 20 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. நகரமயமாகுதலின் காரணமாக, வாகனங்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒரு நாளைக்கு 73 இலட்சம் கி.மீட்டருக்கு சாலைகளில் பேருந்துகளை இயக்கி, மாநிலத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கிறது.

### 9.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் சாலை பாதுகாப்பு முயற்சிகள்

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விபத்து இல்லாத போக்குவரத்துக் கழகங்களாக மாற்ற இத்துறை உறுதிபூண்டுள்ளது. இதனை அடைவதற்கு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு வகையான செயல்பாடுகளை அறிமுகப்படுத்துகிறது. சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை கூடுதலாக

நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்துத் துறை, போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து செயல்படுகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பேருந்துகளில் கீழ்கண்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது:–

i) தானியங்கி கதவு மூடும் அமைப்பு

ii) ஓட்டுநர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சி

iii) ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கான வசதிகளை மேம்படுத்துதல்

iv) பயணங்களின்போது பேருந்து தொடர்பான அறிவிப்புகள்

v) மறைவு பகுதிகளை காட்டும் கண்ணாடிகளை பொருத்துதல்

vi) ஓட்டுநருக்கு அருகாமையிலுள்ள வாகனங்கள் குறித்து எச்சரிக்கும் கருவிகள்

vii) அதிக விபத்து நடக்கும் வழித்தடங்களை கண்டறிதல்

viii) விபத்துகளின் அறிவியல் பகுப்பாய்வு

### 9.3 சாலை விபத்துகளைக் குறைக்க அரசு போக்குவரத்துக் கழகங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மாநிலத்தில் சாலை விபத்துகளைக் குறைக்க அரசு போக்குவரத்து கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன:–

i) ஓட்டுநர் வாகனம் ஓட்டும்போது கைபேசிகளைப் பயன்படுத்துதல் மற்றும் பணியின்போது மது அருந்துதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

ii) ஓட்டுநர் பேருந்தினை எடுப்பதற்கு முன்னர் சுவாசப் பரிசோதனைக் கருவி மூலம் மது அருந்தியிருக்கிறாரா என்பதை கண்டறியும் சோதனைகள் நடத்தப்படுகின்றன

iii) போக்குவரத்துத்துறை பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனை கருவிகளைக் கொண்டு பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும், காவல் துறையின் மூலம் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்

iv) அடிக்கடி விபத்து நடைபெறும் மறைவுப் பகுதிகள் வரைபடமாக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சரிசெய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

v) நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் காவல்துறையின் உதவியுடன் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துவது, எச்சரிக்கை பலகைகள் மற்றும் போக்குவரத்து இயக்கங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

vi) உயிரிழப்பு விபத்துகளை தொடர்ந்து ஏற்படுத்தும், தவறும் செய்யும் ஓட்டுநர்கள் மீது, அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒரே மாதிரியான கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

vii) பிற துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

viii) ஓட்டுநர்களின் மனஅழுத்தத்தைக் குறைக்க யோகா மற்றும் தியான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன

ix) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

x) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களும் விபத்தில்லா வாகனம் ஓட்டுவதை ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படுகின்றன.

xi) கடந்த சில ஆண்டுகளாக அரசு போக்குவரத்து கழக பேருந்துகளின் விபத்துகள் குறைந்துள்ளன. அரசு பேருந்து விபத்துகள் மூலம் உயிரிழந்தவர்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2019–2020 (கொரோனாவிற்கு முன்) | 19,290 | 867 | 969 |
| 2020–2021 (கொரோனா காலத்தில்) | 19,290 | 343 | 381 |
| 2021–2022 (கொரோனா காலத்தில்) | 19,290 | 705 | 762 |

### 9.4 பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து சாலை பாதுகாப்பு வாரம் கடைப்பிடித்தல்

சாலையை பயன்படுத்துபவரிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த

ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தவும், அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கும் அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. இதனால் அரசு போக்குவரத்து பேருந்துகள் மூலம் ஏற்படும் விபத்து இறப்பு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது.

சாலை விபத்துகள் ஏற்படுத்தும் காரணிகளாக சாலைகளின் வகைகள், சாலை விபத்து ஏற்படும் நேரம், சாலை விபத்து அடிக்கடி ஏற்படும் மாதங்கள், சாலையை பயன்படுத்துவோரின் பிரிவுகள், வயது, ஓட்டுநர்களின் விபத்து வரலாறு ஆகியவை ஆகும். கண் பார்வை பரிசோதனைகள் அவ்வப்போது ஓட்டுநர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு நிலையான பயிற்சி அளிக்கப்படுவதன் மூலம் விபத்துகளை குறைத்து இறுதியில் அதை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒரு விபத்து விசாரணைக் கையேட்டை வெளியிட்டுள்ளது. இது அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்து குறித்து ஆய்வு செய்வதற்கு வழிகாட்டியாக செயல்படுகிறது.

## 10. எதிர்காலக் கொள்கை மற்றும் திட்டங்கள் (Future Policies and Road Map)

### 10.1 தொழிலாளர் நலன்

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்கள், நிருவாகம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்து கொள்ளப்படும் ஊதிய ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகின்றன. 14–வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் இறுதி கட்டத்தில் உள்ளது.

### 10.2 மாற்று எரிபொருள்கள்

சமீபத்திய ஆண்டுகளில், வழக்கமான பேருந்துகளுடன் ஒப்பிடும்போது வாகன இயக்கம், புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் அதிக இணக்கத்தன்மை, குறைந்த புகை வெளியேற்றும் குழாய் (tailpipe) மற்றும் வாகனத்தின் ஆயுட்காலம் முழுவதும் வெளியேற்றப்படும் புகை ஆகியவற்றிற்காக எரிசக்தி ஆற்றலை திறம்பட மாற்றக்கூடிய பல்வேறு பயன்கள் காரணமாக நகரங்களில் இந்த மாசில்லா வாகனத் தொழில் நுட்பங்கள் பெருமளவில் அனைவரையும் ஈர்த்துள்ளன. இந்த தொழில்நுட்பங்கள் நகரங்களின் ஒட்டுமொத்தமாக காற்றின் தரம் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதோடு, உலகளாவிய பருவநிலை மாற்றத்திற்கும் பயனளிக்கும். மேலும்,

இத்தகைய தொழில்நுட்பம், அரசு போக்குவரத்தினை பொது மக்களை எவ்வாறு கவரும் என்பது குறித்து பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கும். மாசில்லா பேருந்துகளின் பயன்பாடுகளுக்கான இத்தகைய மாற்றமானது, பேருந்து செயல்பாட்டை "மேம்படுத்துவது" மட்டுமின்றி, மக்கள் தனியார் பேருந்துகளிலிருந்து அரசு பேருந்துகளை பயன்படுத்துவதன் வாயிலாக கணிசமான பயன்களை அடையும். இது பொதுவாக, கார்பன் புகை வெளியேறுவதை குறைப்பதற்கும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கும் ஒட்டு மொத்த நகர்ப்புற செயல் திறனை மேம்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும்.

அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), திரவ இயற்கை எரிவாயு (LNG), மின்கல–மின்சார பேருந்துகள் (BEB), டீசல்–மின்சார கலப்பின வகை (Hybrid/HBD), உயிரி எரிபொருள் மற்றும் ஹைட்ரஜன்–2 ஆகியவை மாற்று எரிபொருட்களாக உள்ளன.

மாசில்லா பேருந்து தொழில்நுட்பங்களின் இயக்க செயல்பாடு, புகை உமிழ்வுகள் மற்றும் செலவுகள், எரிசக்தி விலைகள் மற்றும் வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் சந்தையில் கிடைக்கும் தன்மை உள்ளிட்ட உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்து கணிசமாக மாறுபடும். ஒரு குறிப்பிட்ட நகரம் அல்லது

பெருவழிக்கான மாசில்லா பேருந்து தொழில்நுட்பத்தை உகந்த முறையில் தேர்வு செய்வது புகை உமிழ்வுகள் (எ.கா. காற்று மாசுபடுத்திகள் அல்லது $CO_2$) உட்பட பல்வேறு காரணிகளை சார்ந்திருக்கும். தொடக்க விலை, நிதி இருப்பு, இலகுவான செயல்பாடு மற்றும் பராமரிப்பு, நிறுவன திறன்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள் போன்ற சாத்தியக்கூறுகளை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### 10.3 ஒருங்கிணைந்த போக்குவரத்து அமைப்பு

பயணத்திற்கு இடையூறு இல்லாமல் பேருந்து, தொடர்வண்டி, மெட்ரோ ரயில், பறக்கும் ரயில் (MRTS) போன்ற அனைத்து பொது போக்குவரத்து முறைகளையும் பயன்படுத்தி தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்வதற்கு பின்வரும் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்:

| வ எண் | ஒருங்கிணைப்பு | விவரம் |
|---|---|---|
| 1 | கட்டண ஒருங்கிணைப்பு | பல்வேறு போக்குவரத்து சேவைகளுக்கான ஒருங்கிணைந்த பயண அட்டை (தேசிய பொது பயணச்சீட்டு ஏற்பாட்டு முறை) இருக்கக்கூடிய போக்குவரத்து வழிமுறை எளிதான போக்குவரத்து சேவைக்கு உதவும். |

| | | |
|---|---|---|
| 2 | தகவல் ஒருங்கிணைப்பு | சரியான நேரத்தை பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில், பேருந்துகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து நிறுத்தங்களை தகவல் தொழில்நுட்ப முறையின் வாயிலாக தகவல் மற்றும் கைபேசி செயலி மூலம் தெரிவித்தல். பெருநகர பேருந்து நிலையங்களில் வழித்தட மற்றும் பயண அட்டவணை தொடர்பான தகவல்களை காண்பிக்கும் நிலையான காட்சி பலகை நிறுவப்பட வேண்டும். |

## 10.4 இரயில்வே திட்டங்களுக்காக இரயில்வே அதிகாரிகளுடன் தொடர் ஒருங்கிணைப்பு

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நில நிருவாக ஆணையர் ஒருங்கிணைப்புடன் தமிழகத்தில் இருவழி இரயில் பாதைகள், புதிய இரயில் பாதைகளை அமைப்பதற்கு நிலங்களை கையகப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக போக்குவரத்துத் துறை உள்ளது. இரயில்வே திட்டங்களை விரைவாக செயல்படுத்த இரயில்வே அதிகாரிகளுடனான தொடர் கண்காணிப்பையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## 10.5 செயல்திறன் அளவுகோல்கள்

செயல்திறன் குறியீடுகள், பணிகள், எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை மதிப்பிடவும், முன்னேற்றப் பகுதிகளை அடையாளம் காணவும், அவற்றின் செயல்பாடுகள், செயல்திறன் நிலைகளில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றனவா என்பதை மதிப்பிடவும் உதவுகின்றன. ஒரு மாதத்தில் அடைய வேண்டிய இலக்குகளுடன் உரிய அளவு

செயல்பாட்டிற்கு கண்டறியப்பட்ட நடவடிக்கை வருமாறு, கி.மீ செயல்திறனின் சதவீதம், முதல் மற்றும் கடைசி பேருந்து நேரந்தவறாமை, குறைவான காத்திருப்பு நேரம், வாடிக்கையாளர் மன நிறைவு, பயண நேரம் கடைபிடித்தல், 1,00,000 கி.மீ.க்கு ஏற்படும் விபத்துகள் எண்ணிக்கை, ஒரு நாளைக்கு ஒரு பேருந்தில் பயணிகளின் எண்ணிக்கை, இருக்கை பயன்பாட்டு விகிதம், பேருந்துகளின் பயன்பாடு விழுக்காடு, ஒரு நாளுக்கு ஒரு பேருந்து செல்லும் சராசரி கி.மீ மற்றும் வருவாய்க்கும் செலவுக்கும் இடையே உள்ள இடைவெளி ஆகியனவாகும். செயல்திறன் குறியீடுகள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் செயல்திறன் நிலைகளை மதிப்பிட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**10.6 பணிகளை பல்வகைப்படுத்தல்**

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், இழப்பைக் குறைப்பதற்கும், பேருந்து பயண முறையை மேம்படுத்துவதற்கும், உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அனுபவம் வாய்ந்த தனியார் போக்குவரத்துச் சேவை வழங்குநர்களுடன், கூட்டு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன . நிருவாகம் மற்றும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைப்பது, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவது மற்றும்

வருவாய் செயல்திறனை அதிகரிப்பது ஆகியவை இதன் இலக்காகும். இந்த நடவடிக்கை நிலைப்படுத்தப்பட்ட, தரமான சேவையுடன் பொது பயணிகளுக்கு நிலையான பொது போக்குவரத்து சேவைகளை பெறுவதற்கு வகை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் பயணிகளுக்கு சரியான நேரத்தில் பேருந்துகள் கிடைப்பது, பாதுகாப்பு, மலிவு, வசதி, தூய்மை மற்றும் நம்பகமான பயணிகள் தகவல் ஏற்பாட்டு முறைகளில் மிகவும் ஆர்வமாக உள்ளனர். பேருந்து பயணத்தில் இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும் போது, இது பயணிகளின் நம்பிக்கையை மீண்டும் பெற பெரிதும் உதவும்.

### 10.7 வட்டார பேருந்து சேவைகளை வழங்குதல்

வட்டார பேருந்து சேவைகள் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆட்சி எல்லைக்கு உட்பட்டவை, ஆயினும் அவை ஊரகப்பகுதிகளுக்குள் செயல்படலாம் அல்லது ஒரு நகர்ப்புறத்தை இணைக்கலாம். வட்டார சேவைகள் பொதுவாக 30 முதல் 100 கி.மீ வழித்தட நீளம் கொண்டவை. வட்டார சேவைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட சந்தைப் பகுதிகளைச் சுற்றியே இருக்கும். அரசு சேவைகளைப் பெறுவதற்கு, மருத்துவப்

பயணங்கள் மேற்கொள்வதற்கு அல்லது பிற இடங்களுக்கு செல்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய மக்களுக்கு சேவை செய்ய வட்டார பேருந்துகள் வடிவமைக்கப்படலாம். சில வட்டார பேருந்துகள் ஒரு நாளில் ஒன்று முதல் இரண்டு பயணத்தடவைகள் மட்டுமே இயக்கப்படுகின்றன, மற்றவை அட்டவணைகளின்படி இயக்கப்படும். பேருந்துகளின் இயக்கத்தில் முடிந்தவரை குவிய மற்றும் ஆர (Hub and Spoke Model) மாதிரிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## 10.8 பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்குவதற்கான பேருந்து சேவைகள்

பேருந்து போக்குவரத்தானது, பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமாகவும், வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும் பொதுவான கருவியாகவும் உள்ளது. பொருளாதார வாய்ப்புகளானது, தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட, மக்கள் மற்றும் சரக்கு போக்குவரத்துடன் அதிகளவில் தொடர்புடையதாக உள்ளது. அதிகளவு பயணிகளுக்கான போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் அதிகளவில் இணைக்கப்பட்டுள்ள போக்குவரத்து இணைப்புகள் ஆகியவை பொதுவான வளர்ச்சி மேம்பாட்டுடன் தொடர்புடையவையாகும். முனைப்பான போக்குவரத்து ஏற்பாட்டுமுறை

இருக்கும்போது, பொருளாதார மற்றும் சமூக வாய்ப்புகள் மூலமான நன்மைகளை வழங்குகின்றன, இதன் விளைவாக, சிறப்பான சந்தை வாய்ப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் கூடுதல் முதலீடுகள் போன்ற பல்வேறு நேர்மறை பயன்கள் கிடைக்கின்றன. திறன்மிகு போக்குவரத்து முறையானது, பல்வேறு பொருளாதாரத் துறைகளிலும் செலவுகளைக் குறைக்கிறது. பேருந்து போக்குவரத்தானது, ஒரு முக்கியமான சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பினை கொண்டுள்ளதாகும், அதை புறக்கணிக்க இயலாது.

### 10.9 பேருந்துக் கட்டுமானம் (முழுமையாக கட்டப்பட்டது மற்றும் வழக்கமான முறையிலான கட்டுமானம்)

பேருந்து கூண்டு குறியீடு (AIS 052) 2015, ஆகஸ்டு முதல் நாளுக்குப் பிறகு பதிவு செய்துள்ள அனைத்து பேருந்துகளுக்கும் பொருந்தும். இந்த பேருந்து கூண்டு குறியீட்டின்படி, பேருந்து கூண்டு கட்டுமானத்தினர்கள் அனைத்து அளவீடுகளுக்கும் இணக்கமாக இருக்கும் வகையில், பேருந்து கட்டமைப்பின் நிலைத்த மற்றும் வலுவான தன்மை, உறுதியான இருக்கை அமைப்புகள் மற்றும் ஒருவேளை பேருந்து கவிழ்ந்தால், அதன் பாதிப்பு குறைவாக இருக்கும் வகையில், பேருந்து

கவிழ்தலின்போது நடைபெறும் பாதிப்புகள் குறித்த பகுப்பாய்வுகள் செய்து வடிவமைக்கப்பட வேண்டும்.

முழுமையான கட்டுமானப் பேருந்து என்பது ஒரு தனி ஒப்பந்த அடிப்படையிலானது, இதில் பேருந்து அமைப்பின் வலிமை, நீடித்த தன்மை மற்றும் பாதுகாப்பு, கொள்முதல் நேரத்தில் விலையேற்றம் தொடர்பான அனைத்து அம்சங்களுக்கும் உற்பத்தியாளரே பொறுப்புடையவராவார்.

தனிப்பட்ட கட்டமைப்பு மாதிரியில், பேருந்தின் அடிச்சட்டம் மற்றும் கூண்டு கட்டமைப்பு தனித்தனியாக கொள்முதல் செய்வதாகும். இது ஒரு பல்வகையான விற்பனை மேலாண்மையாகும்.

### 10.10 வயது முதிர்ந்த பேருந்துகளின் கூண்டு கட்டமைப்பு முழுவதையும் மறுசீரமைத்தல்

கொரோனா பெருந்தொற்று பாதிப்பினாலும் மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாகவும் 2019–2020–ஆம் ஆண்டிலிருந்து புதிய பேருந்துகளை அரசுப் போக்குவரத்து கழகங்கள் கொள்முதல் செய்யவில்லை.

வழிகாட்டு நெறிமுறைகளின்படி, விரைவுப் பேருந்துகள் 7 ஆண்டுகளின் முடிவில் (அல்லது) 12 லட்சம் கிலோ மீட்டர் ஓடி முடித்தவுடன், இவற்றில் எது முந்தையதோ அதை கணக்கில் கொண்டு, விரைவு

பேருந்துகள் மாற்றப்பட வேண்டும். மற்ற அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களின் பேருந்துகளும் 9 ஆண்டுகளின் முடிவில் (அல்லது) 12 லட்சம் கிலோ மீட்டர்கள் ஓடி முடித்தவுடன், இவற்றில் எது முந்தையதோ அதை கணக்கில் கொண்டு, மாற்றப்பட வேண்டும்

பயணிகள் தங்கள் பயணத்திற்காக, தரமான மற்றும் வசதியான பேருந்துகளை விரும்புகிறார்கள். குறிப்பிட்ட ஆயுட்காலத்தின் பாதி ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், பேருந்தின் நிலையை உறுதி செய்வதற்கு, பேருந்தினை பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இதனால் பேருந்து அடுத்த 5 முதல் 6 ஆண்டுகள் வரை பேருந்தினை யாதொரு கூடுதல் செலவினமின்றி இயங்குவதை உறுதி செய்யலாம். பழைய பேருந்தின் அடிச்சட்டம் நல்ல நிலையில் இருக்கும்பட்சத்தில் அப்பேருந்துகளின் முழு கூண்டினையும் புதுப்பிக்க வாய்ப்பு உண்டு. பேருந்து புதுப்பிக்கப்பட்ட பின்னர், அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு பேருந்திற்கான யாதொரு கூடுதல் செலவினமுமின்றி பேருந்துகளை இயக்கலாம்.

## 10.11. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான நிலங்களை வணிகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல்

பொதுவாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயணச்சீட்டுகள் மற்றும் பயணியர் பயண அட்டைகள் விற்பனை வாயிலாக வருவாய் ஈட்டுகின்றன, இது போக்குவரத்து வருவாய் என அழைக்கப்படுகிறது. போக்குவரத்து வருவாயைத் தவிர வணிக வருவாய் மற்றும் பயண கட்டணமல்லாத ஏனைய வருவாய் என அறியப்படும் வருவாய் ஆதாரம் உள்ளது. இந்த வணிக வருவாயை ஏற்படுத்துவதன் மூலம், அரசு போக்குவரத்து கழகங்களின் தொடர் செலவினங்களை குறைப்பதற்கு நிச்சயம் உதவும். அண்மை காலங்களில், கட்டுமான உள்கட்டமைப்பு மற்றும் நிலம் உடைமை ஆகியவற்றை நிலையான வணிக வருவாயை ஈட்டுவதற்கு பயன்படுத்தப்படலாம் என்பதை அரசு போக்குவரத்து கழகங்கள் உணர்ந்துள்ளன.

பேருந்து பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களில் அரசுப் போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான மதிப்புமிக்க நிலங்கள் உள்ளது. இந்த கட்டடங்களுக்கு மேலே உள்ள வான்பகுதி வணிக நோக்கங்களுக்காக, அவர்களின் சொந்த வளங்களைப் பயன்படுத்தியோ

அல்லது தனியார் துறையின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படலாம். இது குத்தகை / வாடகை வடிவில் கணிசமான வருவாயை ஈட்டித் தரலாம். எவ்வாறாயினும், எதிர்கால பொதுப் போக்குவரத்துத் தேவைகள் போதுமான அளவு கவனித்துக் கொள்ளப்பட வேண்டும் மற்றும் அத்தகைய முன்னேற்றங்கள் விரிவாக்கத்திற்கான திட்டங்களை பாதிக்காது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

### 10.12 பயணக் கட்டணமல்லாத ஏனைய வருவாய் வளங்களை பெருக்குவதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் நிதி திரட்டுதல்

தமிழ்நாட்டிலுள்ள அரசுப் போக்குவரத்து கழகங்கள் லாபம் ஈட்டாத நிலையில் உள்ளன. மேலும் நிலையான செயல்பாடுகள் மற்றும் பேருந்தை மாற்றுவதற்கு உள்கட்டமைப்பு மேம்பாடு அல்லது வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசின் ஆதரவையே சார்ந்துள்ளன.

மாநிலங்கள் முழுவதிலும் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் 'பயணக் கட்டணமில்லா ஏனைய வருவாய்' போன்ற பல்வேறு புதுமையான கண்ணோட்டத்தில் / பல்வேறு விதங்களில் தங்களுடைய நிதி நிலைமையை அதிகரிக்க வேண்டும். ஏனைய வரவுக்கான முக்கிய ஆதாரமாக விளம்பரப் பிரிவு உள்ளது. இதன் மூலம்

வருவாயை எளிதாக அடையலாம். கழகத்தின் சொத்துக்களின் மேல் விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்துவதாலும், பேருந்துகள் (வெளிப்புறம் மற்றும் உள்புறம் இரண்டும்) பயணச்சீட்டு மற்றும் பயண அட்டை ஆகியவை வாயிலாக விளம்பரங்களை காட்சிப்படுத்துவதாலும் கணிசமான வருவாயைப் பெறலாம். ஆண்டுதோறும் அதிக ஏலம் கேட்பவருக்கு விளம்பர உரிமைகள் அளிக்கலாம். அதிகார அமைப்பின் கொள்கைகளுக்கு விளம்பரங்கள் இணக்கமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விளம்பரத்தை ஒழுங்குபடுத்தி அதற்கு வரி விதிக்கின்றன). உணவகம், சரக்கு சிப்பம் அனுப்பகம், சரக்கு மற்றும் விரைவஞ்சல் சேவைகள், திருமணங்கள் மற்றும் கூட்டங்கள் போன்றவைக்கு மண்டபங்களை வாடகைக்கு விடுதல், பேருந்து நிலையங்கள் / பேருந்து நிறுத்தங்களில் பணம் செலுத்தி வாகனத்தை நிறுத்தி வைக்கும் வசதி, பொதுமக்களுக்கு ஓட்டுநர் பயிற்சி மற்றும் வாடகை இழுவை வாகனங்கள் மற்றும் ஏனைய பகுதிகள் போன்றவை வருவாய் ஈட்டுவதற்கான பகுதிகளாகும்.

## 10.13 பேருந்தை மாற்றுதல்

வயது முதிர்ந்த பேருந்துகளை மாற்றுவது என்பது அரசின் கொள்கையாகும். மேலும் இது சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக உள்ளன. அதாவது, வாகனத்தின் வயது, ஓடிய கீ.மீட்டர் எண்ணிக்கை, கூண்டின் நிலை போன்றவை சாலையின் தரம், உயரும் வாகன தொழில்நுட்பங்கள், பேருந்து கூண்டுகளின் ஆயுட்காலம், இந்திய அரசின் புதிய பழைய வாகன அழிப்புக் கொள்கைகள், அண்டை மாநிலங்களால் கடைபிடிக்கப்படும் கொள்கைகள், அரசு போக்குவரத்துக் கழகங்களால் கடைபிடிக்கப்படும் பராமரிப்பு முறையில் முன்னேற்றம். மின்சார வாகனங்கள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (**CNG**) போன்றவற்றை பயன்படுத்தும் மாற்று எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் போன்ற பசுமை வாகனங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றை கருத்தில்கொண்டு விதிமுறைகள் அவ்வப்போது திருத்தி அமைக்கப்படுகின்றன. மேலும், எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம், பராமரிப்புச் செலவு மற்றும் மூலதனச் செலவு ஆகியவற்றை உரியவாறு கருத்தில்கொண்டு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் சாலையில் இயக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவு

செய்த அல்லது 12 இலட்சம் கி.மீட்டர் தூரம் பயணம் நிறைவு செய்த பேருந்துகள் (இவற்றில் எது முந்தையதோ அதை நிறைவு செய்யும்) மற்றும் ஏனைய அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை பொறுத்தவரை ஒன்பது ஆண்டுகளின் முடிவில் (அல்லது) **12** இலட்சம் கி.மீட்டர் தூரம் பயணம் நிறைவு செய்யும், (இவற்றில் எது முந்தையதோ அதை நிறைவு செய்யும்) பேருந்துகளை கழிவு செய்வதற்கான விதிமுறைகளை மாற்றி அமைத்து அரசாணை (நிலை) எண். 70, போக்குவரத்து (அ) த்துறை, நாள். 08.07.2021–ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**10.14 நிகர செலவு ஒப்பந்த (GCC) மாதிரி**

நிகர செலவு ஒப்பந்த (**GCC**) மாதிரி என்பது ஒரு பொது தனியார் குறித்த மாதிரியாகும். போக்குவரத்து வலைதளங்களை நிர்வகிக்கும் பொறுப்பு, வருவாய் ஈட்டுதல் அரசு போக்குவரத்து கழகங்களால் மேற்கொள்ளப்படுகிறது, அதேசமயம் பேருந்துகளை வாங்குதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை இயக்குபவரின் (Operator) பொறுப்பாகும். பயணிகளுக்கான சேவையின் நிலை மற்றும் தரத்திற்கு அரசு போக்குவரத்து கழகங்கள் பொறுப்பாகும். வழக்கமாக அரசு போக்குவரத்து கழகங்கள் இயக்குபவரால் இயக்க வேண்டிய தினசரி கிலோ

மீட்டர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. இயக்குபவருக்கு கி.மீ அடிப்படையில் கட்டணம் வழங்கப்படும்.

பேருந்துகள் கொள்முதல் செய்ய மாநில போக்குவரத்து கழகத்திற்கு தேவைப்படும் பெரும் மூலதனச் செலவினை குறைப்பதே மொத்த ஒப்பந்த மாதிரியால் ஏற்படும் பெரும் நன்மையாகும். கூடுதலாக, உதிரிபாகங்கள் மற்றும் பிற நுகர்பொருட்களை பராமரிப்பதற்காக மாநில போக்குவரத்து நிறுவனத்திற்கு தேவைப்படும் பெரும் மூலதனச் செலவினம் குறைக்கப்படுகிறது. மேலும், பராமரிப்பு மற்றும் இதர ஊழியர்களின் ஊதியத்திற்கான செலவும் குறைக்கப்படுகிறது. மொத்த செலவு ஒப்பந்த (**GCC**) மாதிரி முறையைப் பின்பற்றுவதால், ஒப்பந்தக் காலம் முழுவதும் கணிசமான சேமிப்பு மற்றும் மேம்பட்ட செயல்திறனை அடைய முடியும். இருப்பினும் நெருக்கடி நிலையை சமாளிக்க அரசு போக்குவரத்து கழகம் போதிய அளவிலான பேருந்துகள் மற்றும் ஊழியர்களை கொண்டிருக்க வேண்டும்.

### 10.15 பெண்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள்

பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக பேருந்துகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு மத்திய கட்டுப்பாட்டு

அறையிலிருந்து கண்காணிக்கப்படுகின்றன. இந்த திட்டம் மாநகர போக்குவரத்து கழகத்தின் 2500 பேருந்துகளிலும், 66 பேருந்து முனையங்கள் / பணிமனை / அலகுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது மாநிலத்தின் அனைத்து போக்குவரத்து கழகங்களின் அனைத்து பேருந்துகளுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படும். சமீபத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி போக்குவரத்து குறித்த பாலின ஆய்வுக் கூடம் (Gender Lab) அமைத்துள்ளது. இந்த ஆய்வுக் கூடம் பெண்கள் பொது போக்குவரத்தை அணுகுவதில் உள்ள தடைகள், பயணத்தின்போது பாதுகாப்பின்மை மற்றும் இயக்கத்தை கட்டுப்படுத்தும் சமூக விதிமுறைகள் போன்றவற்றை ஆய்வு செய்து, பேருந்துகள் உள்ளிட்ட பொது இடங்களில் பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும்.

**10.16 மானியங்கள் வழங்குவதற்கான முக்கிய அளவுருக்களை நிர்ணயிப்பதற்கான குழு**

போக்குவரத்து கழகங்களின் செலவு குறைக்கப்படுவதற்காகவும் அவை விதிமுறை அடிப்படையிலான செயல்திறன் குறியீடுகளை அடைவதற்காகவும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இலவச அல்லது மானிய விலையில் பயணிப்பதற்காக அல்லது அதிக கட்டண வழித்தடங்களை இயக்குவதற்கான

நெறிமுறை செலவு அளவுருக்களின் அடிப்படையில் மானியங்களை வழங்குவதற்கான முக்கிய செயல்திறன் குறியீடுகளை (Key Performance Indicator) நிர்ணயிக்க குழு ஒன்று அரசாணை (நிலை) எண்.36 போக்குவரத்து (ட்டி.1) துறை, நாள்.01.04.2022–இன்படி அமைக்கப்பட்டுள்ளது.இக்குழுவானது, போக்குவரத்துக் கழகங்களின் செலவுகளை குறைப்பதற்கும் செயல்திறன் குறியீடுகள் அடிப்படையில் விதிமுறைகளை உருவாக்குவதால் பயணியர்கள் திருப்தியடைய வாய்ப்பு ஏற்படுத்தும்.

**10.17 கட்டணக் கொள்கை**

பேருந்து கட்டணம் 2001–ஆம் ஆண்டிற்கு பிறகு 2011 மற்றும் 2018–ஆம் ஆண்டுகளில், அதாவது 10 மற்றும் 7 ஆண்டுகளுக்கு பிறகு மாற்றி அமைக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரபிரதேசம் மற்றும் கேரளா முறையே 16, 8, 9 முறைகள் பேருந்து கட்டணங்களில் மாற்றம் மேற்கொண்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் 2001–ஆம் ஆண்டிற்குபின் 2 முறைகள் மட்டுமே பேருந்து கட்டணங்களில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்து கழகங்களில் தானியங்கு குறியீட்டு முறையில் கட்டணத்தை மாற்றியமைக்கும் நோக்கத்திற்காக ஒரு நிபுணர்குழுவும், அதிகாரமளிக்கப்பட்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### 10.18 தேசிய பொது இயக்க அட்டை

மெட்ரோ ரெயில், பேருந்து, புறநகர் இரயில், சுங்கம், வாகன நிறுத்தம், சீர்மிகு நகரங்கள் மற்றும் சில்லரை விற்பனையகங்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் பணம் செலுத்துவதற்கு தற்போது வாடிக்கையாளர்கள் வைத்துள்ள பற்று / கடன் அட்டைகளைப் பயன்படுத்த அவர்களுக்கு தேசிய பொது இயக்க அட்டை உதவுகிறது. தேசிய பொது இயக்க அட்டையில் சேமிக்கப்பட்ட தொகை, பங்குதாரர்களுக்கான குறைந்தளவு நிதி அபாயத்துடன் அனைத்து பயணத் தேவைகளிலும் இணைய பயன்பாடின்றியே பரிவர்த்தனைகளை மேற்கொள்ள உதவுகிறது. இந்த அட்டையின் இந்த சிறப்புகூறு, பயனாளிகளின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுகிறது. உதாரணமாக, மாதாந்திர அனுமதி அட்டைகள், குறிப்பிட்ட கால அனுமதி அட்டைகள். RuPay இயங்கு தளத்தால் இயங்கும் தேசிய பொது இயக்க அட்டை, பல்வகை இணையமற்ற கட்டண முறைகளை எளிதாக்குகிறது. ஜெர்மனி வளர்ச்சி வங்கி திட்டத்தின்கீழ் பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தப்பட்டவுடன், மாநகர போக்குவரத்து கழகத்தில் தேசிய பொது இயக்க அட்டை செயல்படுத்தப்படும்.

### 10.19. புவியிடஞ்சுட்டி (GPS) அடிப்படையிலான பேருந்து நிறுத்த அறிவிப்பு முறை

பேருந்து அதன் வழித்தடத்தில் செல்லும்போது, காட்சித்திரை மற்றும் ஒலி பெருக்கி வாயிலாக, அடுத்த பேருந்து அமைவிடம் குறித்த தானியங்கி பேருந்து நிறுத்த அறிவிப்பு முறை வழங்குகிறது. இந்த நிறுத்த அறிவிப்புகள், மின்னணு செய்தியாக காட்சிப்படுத்துதல் மற்றும் ஒலிபெருக்கி வாயிலாக அல்லது பொது தகவல் திட்டத்தின் வாயிலாக அறிவிக்கப்படலாம். பேருந்து நிறுத்த தானியங்கி அறிவிப்பு முறையில், நடத்துநர் அறிவிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவையின்றி, நிறுத்த அறிவிப்புகள் தொடர்ந்து அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய உதவுகிறது. இந்த அமைப்புகள் வழித்தடம் குறித்து தெரியாத புதிய பயணிகளுக்கு உதவுவது மட்டுமின்றி, பார்வை குறைபாடுள்ளவர்களும் தங்கள் நிறுத்தத்தை அடையாளம் காண உதவுகின்றன. இந்த தானியங்கி முறைகள் மூலம் அறிவிப்பு திரையில் காண்பிக்கப்படும் நிலையில் அதனை தீர்மானிக்க தானியங்கி வாகன இருப்பிடத்தை (AVL) அறிய பயன்படுத்தப்படலாம்.

### 10.20 இயக்க மற்றும் நிதி சார்ந்த செயல்திறனை கண்காணிக்கும் முகப்புப் பலகை

அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிக்கனமான ஒரு பொது போக்குவரத்து சேவையாகும். இது

மாநிலத்திலுள்ள கணிசமான மக்கள் தொகைக்கு ஏற்றவாறு இலகுவான பயண வசதியை வழங்குகிறது.

இத்தகைய அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன் மதிப்பாய்வு, பொதுவாக அவற்றின் இயக்க மற்றும் நிதி சார்ந்த செயல்திறனை மதிப்பிடுவதன் வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது. முகப்புப் பலகை, முக்கிய செயல்திறன் குறியீட்டை திரையில் காட்சிப்படுத்துகிறது. இத்தகைய முக்கிய செயல்திறன் குறியீடு, தற்போதைய நிலையை நிலவும் போக்குடன் கண்டறிவதுடன் செயல்திறனை மதிப்பீடு செய்து அவற்றை முந்தைய காலங்களுடன் ஒப்பிடுகின்றன.

### 10.21 பல்வேறு வகையான கடைக்கோடி பகுதிகளையும் இணைக்கும் பொது போக்குவரத்து அமைப்பு

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான முக்கியக் காரணிகளில் இடம் பெயர்தலும் ஒன்றாகும். இறுதியாக சேருமிடம் அல்லது பேருந்து பயணத்தின் தொடக்கம் மற்றும் இறுதியாக சேருமிடத்திற்கான இணைப்பு வசதி என்பது பொதுப் போக்குவரத்தில் தனிநபர் பயணம் தொடங்குமிடம் அல்லது சேருமிடம் என்பதைக் குறிக்கிறது. பேருந்து நிலையம், மெட்ரோ இரயில் நிலையம், புறநகர் இரயில் நிலையம் மற்றும் பறக்கும் இரயில் போன்ற அருகிலுள்ள பொதுப் போக்குவரத்து சேவையை

அடைய பொதுப் போக்குவரத்துப் பயனாளிகள் நடைபயணம், ஆட்டோ அல்லது வாடகை வாகனங்களில் செல்லலாம். பொதுப் போக்குவரத்திலிருந்து தொடங்குமிடம் / செல்லுமிடத்திற்கான இடைவெளியை பேருந்து முறையின் வாயிலாகவே சரிசெய்தால், பொதுப் போக்குவரத்தில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை உயரும். மேலும் தற்போது தனியார் போக்குவரத்தை பயன்படுத்துபவர்களும் பொது போக்குவரத்தை பயன்படுத்த விரும்புவார்கள்.

**10.22 மின்னணு முறையில் சேவை வழங்குதல்**

தமிழ்நாடு 2016–ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை விநியோகம்) விதிகளின் கீழ், மின்னணு சேவை வழங்குதல் முறையின் கீழ் இணைய முறையில் 8 அரசு போக்குவரத்து கழகங்களில் பயணம் மேற்கொள்ளும் வெவ்வேறு வகை நபர்களுக்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 13 வகையான கட்டணச் சலுகைகளை (100% இலவசம், 75%, 50%, 1/3, இலவச அடையாளவில்லை போன்றவை) வழங்க வேண்டியிருக்கிறது.

### 10.23 பணமில்லா பயணச்சீட்டு முறை

இணையவழி மின்னணு பயணச்சீட்டு முறையில் பணமில்லா பரிவர்த்தனை என்ற வாய்ப்பு பயணிகளுக்கும் நடத்துநர் பயணச்சீட்டை வழங்குவதற்கும் அதனை முறையாக கணக்குகளை வைத்துக்கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த முறை, நடத்துநர்களுக்கு சோர்வினைப்போக்கி, முறையாக கணக்குகளைக் கையாளவும், அரசு போக்குவரத்து கழகங்களின் செயல்பாட்டு திறனை மேம்படுத்துகிறது. மேலும், ஒரு வழித்தடத்தில் சரியான நேரத்தின் அடிப்படையில் பயணம் செய்ய மற்றும் போக்குவரத்து முறையினை கண்காணிக்கவும் உதவுகிறது.

### 10.24 அதிவேக டீசல் கொள்முதல் செய்யும் முறை

திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்., மற்றும் திருவாளர். இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்., போன்ற பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து மொத்த நுகர்வோர் என்ற பிரிவின் கீழ் அதிவேக டீசல் (HSD) தள்ளுபடி விலையில் வாங்கப்படுகிறது. அதிவேக டீசலை பெருமளவு தள்ளுபடியுடன் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 10.25 அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான வலைதளம்

பல ஆண்டுகளாக, வலைதளம் பொது மக்களுக்கான தகவல் பெறும் ஊடகமாக இருப்பதால், பொது மக்கள் அரசுத் தகவல்கள் மற்றும் சேவைகளை அணுகுவதற்கு வசதியாக, அரசு அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான ஏராளமான வலைதளங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நோக்கத்துடன், மாநகரப் போக்குவரத்துக் கழகம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) ஆகியவை தங்கள் இணையதளங்களை உருவாக்கியுள்ளன. மற்ற வணிக நடவடிக்கைகளான, பேருந்து சேவையை முன்பதிவு செய்தல், இணையவழி பேருந்து பயண அட்டை வழங்கல் / புதுப்பித்தல் போன்ற இணையவழி சேவைகள் இதன்மூலம் செயல்படுத்தவும் முடியும்.

### 10.26 கைவிரல் ரேகை வருகைப்பதிவு முறை

கைவிரல் ரேகை வருகைப்பதிவு சாதனத்தின் வழியாக பணியாளர்களின் தினசரி வருகை பதிவு செய்யப்படுகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்கள், தனது பணியாளர்களின் வருகைப் பதிவை முறையாக கண்காணிப்பதற்கு இது உதவுகிறது. பணி நேரத்தின் போது பணியாளர்கள் அலுவலகத்திற்குள் வரும் நேரத்தையும், அலுவலகத்தை விட்டு வெளியே செல்லும் நேரத்தையும் பதிவு செய்து வைக்கும் வகையில் ஒவ்வொரு பணியாளரின் விரல்ரேகைப் பதிவும் பயன்படுகிறது. அரசு போக்குவரத்து கழகங்களின் சில அலுவலகங்களில் கைவிரல்ரேகை வருகைப்பதிவு முறை நடைமுறையில் உள்ளன. தலைமையகங்கள், மண்டல அலுவலகங்கள் மற்றும் பணிமனைகளில் கைவிரல்ரேகை வருகை பதிவு முறையை கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 10.27 நைட்ரஜன் வாயுவை பயன்படுத்தி உருளிப்பட்டையின் ஆயுளை அதிகரித்தல்

உருளிப்பட்டை (Tyre) செயல்திறனை அதிகரிப்பது குறித்த நேர்வில், சாதாரண அழுத்தக் காற்றினால் நிரப்பப்பட்ட உருளிப்பட்டைகளை காட்டிலும், நைட்ரஜன் வாயு நிரப்பப்பட்ட உருளிப்பட்டைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன. நைட்ரஜன் வாயு, குறைந்த எரிபொருள் பயன்பாட்டையும், நீடித்த தன்மையையும் அதிகரித்து, பயணத் தரத்தை அதிகரித்து, உருளிப்பட்டைகளுக்கு

சாலைகளின் மீது நல்ல பிடிப்பினை அளிக்கிறது. ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கொரு முறை காற்று அழுத்தத்தை சரி செய்யவேண்டிய அவசியம் இருக்காது. மேலும், மிகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கும். நைட்ரஜன் வாயு ஆலை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் (விழுப்புரம்) சில பணிமனைகளில் ஏற்கெனவே நிறுவப்பட்டு 60 விழுக்காடு அளவிற்கு டயர் பழுதுகள் குறைக்கப்பட்டுள்ளன.

## 11. முடிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலுடன், குறைந்தக் கட்டணத்தில் பொது மக்களுக்கு நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட பேருந்து அடிப்படையிலான பொது போக்குவரத்து சேவைகளை இத்துறை வழங்கி வருகிறது. இத்துறையானது, சாதாரண நகர பேருந்துகளில் பெண்கள் இலவசப் பயணம் என்ற முதன்மை திட்டத்தை செயல்படுத்தியதோடு, மாற்றுத் திறனாளிகளின் உதவியாளர்களுக்கும் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. இலவச மகளிர் பயண திட்டத்தினை அறிமுகப்படுத்திய பிறகு சுமார், 106.34 கோடி மகளிர் சாதாரண கட்டண பேருந்துகளில் இலவசமாக பயணம் மேற்கொண்டுள்ளனர். இத்திட்டம் பெண்களின் அடிப்படைத் தேவைகளான வேலைவாய்ப்பு, கல்வி, பொழுதுபோக்கு, சமூகச் செயல்பாடுகள் போன்றவற்றிற்காகப் பேருந்துகளில் பயணிக்க ஊக்குவிக்கிறது. மேலும், நகர பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளில் சுமார் 62% பேர் பெண்களாவர்.

பேருந்துகளில், பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசுப் போக்குவரத்து கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன, இதன்

விளைவாக பேருந்துக் கட்டண வருவாய் கொரோனா பெருந்தொற்றின் முந்தைய நிலையை அடைந்துள்ளது. அரசுப் போக்குவரத்து கழகங்கள் வாகனங்களில் (BS–VI க்கு பொருத்தமான டீசல் மூலம் இயங்கும் பேருந்துகள் மற்றும் மின்சாரம் மூலம் இயங்கும் பேருந்துகள்), தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம், வாகனங்களை கண்காணிக்கும் தானியங்கி நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகள், பொதுமக்களுக்கு நிகழ்நேர தகவல் வழங்குதல் மற்றும் பயணக் கட்டணத்திற்கான பணமில்லா கட்டண முறை ஆகிய புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. பேருந்துப் பயணம் மேற்கொள்ளும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை அரசு உறுதி செய்யும்.

பறக்கும் இரயில்திட்டம் (MRTS), புறநகர ரயில், மெட்ரோ இரயில் போன்றவற்றுடன் தடையற்ற பொதுப் பயணச் சேவை, வருவாய், பயணிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிக்க, பொதுப் போக்குவரத்து அமைப்பு ஏனைய அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படும். இது பொதுப் போக்குவரத்து அமைப்பில் பயணிகளின் பங்கை அதிகரிப்பதுடன் அனைத்து அமைப்புகளும் பயன்பெறும் என்ற நிலையை உருவாக்கும்.

நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள மத்திய வணிக மாவட்டப் (CBD) பகுதி மற்றும் பிற வணிகப் பகுதிகளில் சொத்துக்கள் இருப்பதால், சொத்துக்களைப் பணமாக்குதல் வாயிலாக பயணக் கட்டணம் அல்லாத வருவாயை உருவாக்க அரசுப் போக்குவரத்து கழகங்கள் செயல்படுகின்றன. பேருந்துகள் வாயிலாக நிகழும் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு இத்துறை முனைப்புடன் செயல்படுகிறது.

அனைத்து நிலைகளிலும் பேருந்து அடிப்படையிலான பொதுப் போக்குவரத்தில் நாட்டின் முதலிடத்தை மீண்டும் பெறுவதற்கு இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**சா. சி. சிவசங்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

*********

# இணைப்பு

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2022–2023

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 3,847,84,36 | 386,89,04 | 1,073,89,01 | 5,308,62,41 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 66,88,73 | – | – | 66,88,73 |
| | **மொத்தம்** | **3,914,73,09** | **386,89,04** | **1,073,89,01** | **5,375,51,14** |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கட்டணமில்லாமல் மகளிர் பயணம் செய்யும் திட்டத்தினை ஆய்வு செய்யும் போது மாநகர போக்குவரத்துக் கழக பேருந்தில் பயணம் செய்த பெண் பயணிகளிடம் இத்திட்டம் குறித்து கேட்டறிந்தார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30.11.2021 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்காக, சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இணைப்பு சிற்றுந்துகளின் இயக்கத்தினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் மயிலாப்பூர் வரையிலான புதிய சிற்றுந்து சேவை (S21C) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 11.04.2022 அன்று கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வின் போது மாண்புமிகு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 9-வது மண்டல குழு தலைவர் ஆகியோர் உடன் இருந்தனர்.




கும்பகோணம், கோயம்புத்தூர் மற்றும் சேலம் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் இந்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்திடமிருந்து பெற்ற மூன்று விருதுகளை 12.04.2022 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.